பக்கங்கள்: பத்து

Nallur Branch Library

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 14 வியாழக்கிழமை (26-02-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 78

# ஒலுமடு நோக்கி முன்னேறுவதற்கு படையினர் தொடர்ந்து பெருமுயற்சி!

## புலிகளின் நிலைகள் மீது நேற்று கடும் தாக்குதல்

வவுனியா, பெப்ரவரி 26

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரசுப் படைகள் கரிப்பட்ட முறிப்பில் இருந்து ஒலுமடு நோக்கி முன்னேறும் முயற்சியில் நேற்றும் ஈடுபட்டன. புலிகளின் பதுங்கு குழிகள், மோட்டார் குண்டுகளை ஏவும் நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

நேற்றைய மோதல்களில் 30க்கும் மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் நேற்று முன்தினம் இடம்பெற்ற சண்டைகளில் படையினரும் புலி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்து பேரவை கொழும்பில் நேற்று சத்தியாக்கிரகம்!

### சிவராத்திரி தினத்தை பொது விடுமுறையாக்கக் கோரிக்கை

கொழும்பு, பெப். 26

மகா சிவராத்திரி விடுமுறையை பொது விடுமுறையாகப் பிரகடனம் செய்யக்கோரி நேற்று இலங்கை இந்து பேரவையினரால் சத்தியாக்கிரகம் அனுஷ்டிக்கப்பட்டது.

கொழும்பு பொன்னம்பலவானேஸ்வர ஆலயத்தில் நேற்றுக் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சுமார் 250 பேர் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர்.

★ மத உரிமைகளை மறுக்காதே
★ அரசு சொல்வதை செயல்படுத்துவதில் தாமதம் ஏன்?

உட்பட போராட்டம் தொடர்பான பல சுலோக அட்டைகள் சத்தியாக்கிரகத்தில் காணப்பட்டன.

பேரவைத் தலைவர். யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெற்ற இச் சத்தியாக்கிரகத்தில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் உட்பட சமய, சமூக அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

(இ-21)

# 16 படையினரின் சடலங்களை புலிகள் நேற்று ஒப்படைத்தனர்

வவுனியா, பெப். 26

கரிப்பட்டமுறிப்பு பகுதியிலிருந்து ஒலுமடு நோக்கி நேற்று முன்தினம் முன்னேற முயன்ற வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் மீது தாம் நடத்திய தாக்குதலில் தம்மால் கைப்பற்றப்பட்ட 20 படையினரின் சடலங்களில் 16 படையினரின் சடலங்களை நேற்றுக்காலை 10 மணியளவில் மல்லாவியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் ஒப்படைத்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

தாம் கைப்பற்றிய படையினரின் சடலங்களில் 4 சடலங்கள்மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதால் அவற்றைத்தாம் பூரண இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதே வேளை புலிகளால் ஒப்படைக்கப்பட்ட 16படையினரின் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நேற்று மாலை 6.30 மணியளவில் வவுனியாவில் வைத்து படை அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் நேற்று முன்தினம் கரிப்பட்ட முறிப்புப் பகுதியில் விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட கடும் மோதலில் தமது தரப்பில் 7 படையினர் கொல்லப்பட்டதாகவும் 30 படையினர் காயமடைந்ததாகவும், 16 படையினரை காணவில்லை என்றும் பாதுகாப்புஅமைச்சு அறிவித்துள்ளது.

(இ-7)

## பொது மன்னிப்பு காலம் நேற்று நள்ளிரவுடன் முடிவு

### 3,492 படையினர் திரும்பினர்

கொழும்பு, பெப். 26

இலங்கையின் சுதந்திர பொன் விழாவை முன்னிட்டு இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றோர்கள் மீண்டும் இராணுவத்தில் சேருவது தொடர்பாக விடுக்கப்பட்ட பொதுமன்னிப்புக்காலம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதுவரை 3 ஆயிரத்து 492 படையினர் மீண்டும் சேவைக்கு திரும்பி வந்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி கடமைக்குத் திரும்புவதற்கு நேற்று நள்ளிரவு வரை காலக்கெடு விதித்தார். (இ-8-7)

## உதவிப் பொலீஸ் அதிபர் உட்பட 10 பேர் காயம்

### மாத்தளையில் கிரனேட் வீச்சு

கொழும்பு, பெப். 26

மாத்தளை மாவட்டம் தம்புள்ள உதவிப் பொலீஸ் அதிபர் அலுவலகம் மீது நேற்று மாலை 6.05 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வான் ஒன்றில் ஆயுதபாணிகளாக வந்தவர்கள் இரு கிர

(10 ஆம் பக்கம் பார்க்)

### முச்சந்திமுரளி



அப்ப சித்திரை புத்தாண்டுக் காலக்கெடுவும் தாண்டப் போகுது போல...!

## அடுத்துவரும் மாதங்களில் யுத்தம் தீவிரமடையலாம்!

### பி.பி.ஸிக்கு அமால் பேட்டி

கொழும்பு, பெப். 26

''வன்னியில் தற்பொழுது இருந்துவரும் யுத்த நிலையை அவதானிக்கும்போது அடுத்துவரும் மாதங்களில் யுத்தம் தீவிரமடையலாம்.''

ஏ.எவ்.பி. செய்தியாளர் அமால் ஜெயசிங்க நேற்று பி.பி.ஸி. சிங்களச்சேவைக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:-

இதுவரை 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விதத்தை கவனத்தில் எடுக்கும்போது இன்னும் பல மாதங்கள் சென்றாலும் யுத்தம் முடிவடையாது போல் தெரிகின்றது.

இந்த யுத்தத்தைப் பொறுத்தவரை இராணுவத் தகவல்களே எங்களுக்கு கிடைக்கின்றன.

45 மைல் நீளமான நெடுஞ்சாலையில் 25மைல்தூரத்தை தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும், இன்னும் 20 மைல்கள் தூரமே கைப்பற்றப்பட உள்ளதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த 20மைல் தூரத்தைக் கைப்பற்ற எடுக்கும் நடவடிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் நால்வரும் இன்றுவருவர்

கொழும்பு, பெப். 26

கடந்த ஞாயிறு இரவு பருத்தித்துறைக் கடற்பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது மூழ்கடிக்கப்பட்ட வலம்புரிக்கப்பலின்உடைந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை

# அனைத்துலக பெண்கள் தினம்

தொடர்பான

## அறிவித்தல்

1) பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகள், மகளிர் அங்கத்தவர் பேச்சுப் போட்டி.

இடம்:- யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபம்

காலம்:- 28-02-98 சனிக்கிழமை காலை 10 மணி

2) மகளிர் அங்கத்தவர் பேச்சுப் போட்டி, கோலம் போடுதல் போட்டி

இடம்:- யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபம்

காலம்:- 28-02-98 சனிக்கிழமை பி.ப. 2 மணி

போட்டியாளர்களுக்கு தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்பட மாட்டாது.

3) யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர் குழுவால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 08-03-98 அன்று நடைபெறும் அனைத்துலக பெண்கள் தின விழாவில் அதிர்ஷ்டம் பாக்கப்படும்.

— மாவட்டச் செயலாளர்.

இல, 14. மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம். சி/2971)

---

அராலி

# பழமை வாய்ந்த பெரியதம்பிரான்

கட்டட நிதிக்கான

## அதிர்ஷ்டலாப சீட்டு முடிவு

முதலாம் பரிசு — இல. — 3166
இரண்டாம் பரிசு — இல. — 1206
மூன்றாம் பரிசு — இல. — 3427

ஆறுதல் பரிசு பெறும் இலக்கங்கள்:
(1) 2670, (2) 444, (3) 2436

செயலாளர்

பெரியதம்பிரான் கோயில்,
அராலி. (சி/2972)

---

# மரண அறிவித்தல்கள்

## அருட்செல்வி மேரி அசம்ரா சுவாம்பிள்ளை தி. கு.

கரம்பொனைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்செல்வி மேரி அசம்ரா சுவாம்பிள்ளை 25-2-98 புதன்கிழமை நாகொட—கந்தானையில் காலமானார்.

இவர் திருக்குடும்பசபையின் தியான யோகக் கிளையைச் சேர்ந்தவர். இக்கிளையில் இணைந்து மானிப்பாயிலும், நாகொட—கந்தானையிலும் தனது செபத்தினாலும், தியானத்தினாலும் பணிபுரிந்தவர்.

இவரது நல்லடக்கம் 26-02-93 வியாழக்கிழமை பி. ப, 4-00 மணிக்கு நாகொட தியான இல்லத்தில் இடம்பெறும்.

இவரது ஆன்ம சாந்திக்காக வேண்டுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மாகாணத்தலைவி

திருக்குடும்ப மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம். (53668)

---

## திருமதி சுகிர்தமலர் கிருஸ்ணபிள்ளை

கொப்பிட்டி உடுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி சுகிர்தமலர் கிருஸ்ணபிள்ளை 23 - 02 - 1998 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சீனிவாசகம் தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற திரு. க. கிருஸ்ணபிள்ளையின் (முன்னாள் உப அதிபர் மகாஜனக் கல்லூரி, அதிபர் நடேஸ்வரா, யூனியன் கல்லூரி), அன்பு மனைவியும், நவரட்ணராசா மற்றும் காலஞ்சென்ற அரசரத்தினம் ஆகியோரின் சகோதரியும், கிருஸ்ணானந்ததேவி, நிர்மலா, பாலஸ்கந்தன், கனகசபேசன், கிருஸ்ணரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரன், சந்திரன், ஜெயமளா, பவளம், லூசியன் பெரேரா ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிலாபத்தில் திரு. சிவநாதனின் இல்லத்தில் இன்று 26 - 02 - 1998 வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. செல்லத்துரை
(இளைப்பாறிய ஆசிரியர்)
திருமதி நல்லம்மா செல்லத்துரை
(இளைப்பாறிய ஆசிரியை)

S. NAVARATNARAJAH,
2/2 - "A" BLOCK,
GOVT. FLATS,
COLOMBO - 4.

"கலைமதி"
மானிப்பாய் வீதி,
உடுவில். (53658)

---

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்!

நெப்போலியன் - சங்கவி - கவுண்டமணி, செந்தில் நடித்த

**பகவத்சிங்**

வீடியோ CD வெளியீடுகள்!

- ★ கொண்டாட்டம்
- ★ தினந்தோறும்

ஓடியோ CD வெளியீடு!

- ★ நினைத்தேன்வந்தாய்
- ★ துள்ளித்திரிந்த காலம்
- ★ பெண் மனசு
- ★ உளவுத்துறை
- ★ ஜேசுதாஸ் – ஹிட்ஸ்

புதிய படப்பாடல்களையும், புதிய திரைப்படங்களையும் உடனுக்குடன் CD யில் வெளியிடும் ஒரே ஒரு நிறுவனம்.

**சுப்பஸோ வீடியோ**
யாழ்ப்பாணம். (சி/2973)

---

## வைதீக வகுப்புக்கள்

வைதீக பூர்வ, அபரக் கிரியைகளுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 27 ஆம் தி. தி. வெள்ளிக்கிழமை முதல் வண்ணை கதிரேசன் கோயில் மண்டபத்தில் தினமும் பகல் 1 மணி முதல் நடைபெறும்.

யாழ்ப்பாணம் கதிரேசன் கோயில்
(53660)

---

# NEW SCIENCE HALL

## ENGLISH COURSES

1. English Literature
   G.C.E. 'O' Level - December, 1998.
2. English Literature
   G.C.E. 'A' Level - August, 1999.
3. General English Course
   For School- Leavers and the employed.

**Classes commence on March 1st at 10-00 a.m.**

Teachers: S.Arasakesari
T.N. Punjaksharam

Further details from the:
-- Director
**NEW SCIENCE HALL**
KANNATHIDDY, JAFFNA.
(53666)

---



உ
சிவமயம்

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய

வழிபடுவோர் சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம் - 1998

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

மேற்படி சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 22-03-1998 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்று 1998 ஆம் ஆண்டிற்குரிய சங்க உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அன்று உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கு நியமனங்கள் உங்களிடமிருந்து அழைக்கப்படுகின்றன. தயவுசெய்து கீழ்க்காணும் படிவத்தை முறையே நிரப்பி 11-03-1998 ஆம் திகதி பகல் 12.00 மணிக்கு முன் எனக்கு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பும்படி உங்களை தயவாய் வேண்டிக் கொள்கிறேன். ஒரு படிவத்தில் ஒரு நியமனம் தான் செய்யலாம். ஒன்றுக்கு மேற் செய்ய விரும்பினால் இப்படிவத்தின் பிரதிகளை நீங்களே தயாரித்து நிரப்பி அனுப்பவும்.

பின்வரும் பதவிகளுக்கு நியமனங்கள் கோரப்படுகின்றன. ஒரு தலைவர், இரண்டு உப தலைவர்கள், ஒரு செயலாளர், இரண்டு உதவிச் செயலாளர்கள், ஒரு பொருளாளர், ஒரு உதவிப் பொருளாளர், இருபத்திரண்டு (22) நிர்வாக சபை அங்கத்தவர்கள்.

**முக்கிய குறிப்பு:**

அங்கத்தவர்கள் அனைவரும் 1997 ஆம் ஆண்டிற்குரிய சந்தாப் பணத்தை 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றிருத்தல் வேண்டும். கட்டத்தவறிய அங்கத்தவர்கள் நடப்பாண்டு உத்தியோகத்தர் தெரிவில் வாக்களிக்கத் தகுதியற்றவராகக் கணிக்கப்படுவார்கள். அத்தகைய அங்கத்தவர், ஓர் உத்தியோகத்தரைத் தெரிவு செய்யும்போது முன்மொழிந்தோ அல்லது வழிமொழிந்தோ இருந்தால், அத்தெரிவு நிராகரிக்கப்படும்.

சந்தாப்பணம் செலுத்த விரும்பும் அங்கத்தவர்கள் பொருளாளரிடம் அல்லது ஆலய காரியாலயத்தில் உங்கள் சந்தாப் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. நா. வேதநாயகன்
பிரதேச செயலர், சண்டிலிப்பாய்.

சண்டிலிப்பாய்.
25-02-1998.

---

# மானிப்பாய்

## மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம்

பணியாளர் தெரிவு நியமனப் பத்திரம்

பதவி: ..................................

நியமிக்கப்படுபவரின் பெயர்: ..................................

அங்கத்துவ இலக்கம்: ..................................

முன்மொழிபவர் பெயர்: ..................................

அங்கத்துவ இலக்கம் ..................................

கையொப்பம்: ..................................

வழிமொழிபவர் பெயர்: ..................................

அங்கத்துவ இலக்கம்: ..................................

கையொப்பம்: ..................................

இப்பதவிக்கு நியமிக்கப்படச் சம்மதிக்கின்றேன்.

நியமிக்கப்படுபவரின் கையொப்பம்: ..................................

திகதி: .................................. [53667]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Branch

# தாமாகவே பதவி விலகிவிடுமாறு பண்டாரியிடம் பிரதமர் கோரிக்கை

## நடவடிக்கைக்கு ஜனாதிபதி தயார்

புதுடில்லி, பெப். 26

உத்தரப் பிரதேச மாநில ஆளுநர் றொமேஸ் பண்டாரி தாமாகவே முன்வந்து பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று இந்தியப் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

முதல்வர் கல்யாண்சிங் தலைமையிலான பாரதீய ஜனதாக்கட்சி அரசை திடீரெனப் பதவி நீக்கம் செய்த ஆளுநரின் செயல் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருப்பது தெரிந்ததே. ஆளுநரை உடனடியாகப் பதவி விலக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதை அடுத்தே பிரதமர் குஜ்ரால் இந்த யோசனையைத் தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில். பதவியில் இருந்த கல்யாண்சிங் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை இரண்டு கூட்டணிக் கட்சிகள் கடந்த சனிக்கிழமை வாபஸ் பெற்றதை அடுத்து அந்த அரசு சட்ட மன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழந்தது. அக்கட்டத்தில் ஆளுநர் றொமேஸ் பண்டாரி மீண்டும் பெரும்பான்மையை நிரூபிக்க கல்யாண் சிங்கிற்கு சந்தர்ப்பம் வழங்காமல் தன்னிச்சையாக — அரசமைப்பை மீறி — கல்யாண்சிங் அரசைக் கலைத்துவிட்டு லோகதந்திரகாங்கிரஸின் தலைவரை முதலமைச்சராக நியமித்தது தெரிந்ததே.

ஆளுநர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை மீறி றொமேஸ் பண்டாரி நடந்து கொண்டது கடும் கண்டனத்துக்கு இலக்காகியுள்ளது.

இதேவேளை—

ஆளுநர் றொமேஸ் பண்டாரியைப் பதவியில் இருந்து விலக்க வேண்டுமா என்பது குறித்து விளக்கம் அளிக்குமாறு கேட்டு ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் பிரதமர் குஜ்ராலுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

பிரதமரின் ஆலோசனையைப் பெறுக் கொள்ளாமலேயே ஆளுநர் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை இந்திய அரசமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள போதிலும் இது விடயத்தில் நாராயணன் பிரதமரின் ஆலோசனையைக் கோரியுள்ளார்.

பிரதமரிடமிருந்து பதில் கிடைத்ததும் ஆளுநர் பண்டாரி மீது ஜனாதிபதி உரிரிய நடவடிக்கை எடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# மொஸாட் தலைவர் பதவி விலகினார்!

ரெல் அவிவ், பெப், 26

இஸ்லாமியத் தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஒருவரைப் படுகொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்ததை அடுத்து அதற்குப் பொறுப்பானவர் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கான ''மொஸாட்'' புலனாய்வு அமைப்பின் தலைவர் டானி யற்ஹோம் தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

அவரது ராஜினாமாவை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஹமாஸ் இயக்கத்தின் மூத்த தலைவர் ஹலித் மிசேய்லை விஷ ஊசி ஏற்றிக் கொலை செய்வதான சதி முயற்சியே தோல்வி அடைந்தது.

கடந்த ஒருமாதகாலமாக நடைபெற்ற விசாரணைகளின் முடிவில் அம் முயற்சி தோல்வியடைவதற்குக் காரணமான குறைபாடுகளுக்கு மொஸாட் அமைப்பின் தலைவரே பொறுப்பாளி எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

ஜோர்தான் தலைநகர் அம்மானில் வைத்தே இந்தக் கொலை முயற்சி எடுக்கப்பட்டது. இதனால் இஸ்ரேலுக்கும் ஜோர்தானுக்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

மொஸாட் தலைவர் பதவியில் இருந்து விலகாவிட்டில் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறையில் இஸ்ரேலுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படமாட்டாது என்று ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் தெரிவித்திருந்தார்

(ஐ)

உலக அரங்கில்

## சிறுவர்கள் மீட்பு

மத்திய கிழக்கிற்குக் கடத்திச் செல்லப்பட இருந்த இரண்டு பங்களாதேஷ் சிறுவர்கள் இந்திய அதிகாரிகளால் மீட்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# ஐ. நா. - பக்தாத் ஒப்பந்தத்துக்கு கிளின்ரன் நிபந்தனையுடன் ஆதரவு!

## படை வாபஸ் உடனடியாக இல்லை

வாஷிங்டன், பெப். 26

ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் ஈராக்குடன் செய்து



கொண்ட ஒப்பந்தத்தை சில நிபந்தனைகளுடனும், எச்சரிக்கையுடனும் ஜனாதிபதி பில் கிளின்ரன் அங்கீகரித்துள்ளார்.

இந்தப் புதிய உடன்படிக்கையின்படி ஈராக்கில் சகல இடங்களிலும் ஐ. நா. ஆயுதப்பரிசோதனைக்குழு எவ்வித இடையூறும் இன்றி தனது பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

ஈராக்கில் உள்ள சகல இரசாயன, உயிரியல், அணு ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட வேண்டும். ஈராக் எதிர்காலத்தில் இத்தகைய ஆயுதங்களை உற்பத்தி செய்யாமல் இருக்கக் கூடியவாறு நீண்டகால அடிப்படையிலான கண்காணிப்பு முறை ஒன்று வகுக்கப்பட வேண்டும். இந்த முறையும் ஈராக் ஏதாவது பிரச்சினைகளைத் தோற்றுவித்தால் மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும்.

இந்த விடயத்தில் எமக்கு பூரண திருப்தி ஏற்படும்வரை எமது படைகள் முழுமையாகத் தயார் நிலையில் தொடர்ந்தும் வளைகுடாவில் நிலை கொண்டிருக்கும் என்றும் அதிபர் கிளின்ரன் தெரிவித்தார்.

வளைகுடாவில் இருந்து தனது படைகளை உடனடியாகத் திருப்பி அழைக்கப் போவதில்லை என பிரிட்டனும் அறிவித்துள்ளது.

(ஐ)

## ராமதாஸ் உண்ணாவிரதம்

சென்னை, பெப். 26

திண்டிவனத்தில் டாக்டர் அம்பேத்கரின் சிலைக்கு அவமரியாதை செய்யப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ப. ராமதாஸ் நேற்று முன்தினம் முதல் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமியும் அதில் இணைந்து கொண்டுள்ளார்.

அம்பேத்கரின் சிலை அவமரியாதை செய்யப்பட்டதற்கு காரணமான தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் பொன்முடி பதவி விலகவேண்டும் என டாக்டர் ராமதாஸ் கோரி உள்ளார். (ஐ)

## விமானக் கடத்தல் முறியடிப்பு

அங்காரா, பெப். 26

துருக்கியில் விமானக் கடத்தல் சம்பவம் ஒன்று முறியடிக்கப்பட்டுள்ளது.

68 பயணிகளுடன் அடானாவில் இருந்து தலைநகர் அங்காரா நோக்கிச் சென்று கொண்டிருந்த விமானத்தை நடுவானில் திசை திருப்பி கடத்திச் சென்றவர்கள் பின்னர் சரணடைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது. பாதுகாப்புப் படையினர் விமானத்தை பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

(ஐ)

## சீனா செய்மதி அனுப்பும்

பீஜிங், பெப். 26

எதிர்வரும் 2 ஆயிரமாம் ஆண்டுக்கு முன்னர் 10க்கும் மேற்பட்ட செய்மதிகளை விண்ணுக்கு அனுப்ப திட்டமிட்டிருப்பதாக 'சின்வோ' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# கிளின்ரன் - சதாம் கூட்டாகச் சதி!

## கேணல் கடாபி குற்றச்சாட்டு

திரிப்போலி, பெப், 26

ஈராக்கிய மக்களுக்கு எதிரான சதியில் அதிபர் கிளின்ரனும், சதாம் ஹுசேய்னும் பங்காளிகளாகச் செயற்படுவதாக லிபிய அதிபர் கேணல் முஹமர் கடாபி வர்ணித்துள்ளார்.

ஈராக்கின் அழிவுகளுக்கு நீங்கள் இருவருமே பொறுப்பாளிகள், மக்களுக்கு எதிரான சதியில் நீங்கள் பங்காளிகளாக ஈடுபட்டுள்ளீர்கள் என்று கேணல் கடாபி தொலைக்காட்சி உரை ஒன்றில் தெரிவித்தார்,

வளைகுடாஆயுதப்பரிசோதனை, அதற்கு விதிக்கப்பட்ட தடை, அதனைச் சாட்டாக வைத்து படைக் குவிப்பு எல்லாமே நாடகமாகும்.

இந்த நாடகத்தை மிகச்சிறப்பாக அரங்கேற்றியதற்காக இவர்கள் இருவருக்குமே 'ஒஸ்கார் விருது' கூட வழங்கலாம் என்றும் அவர் தெரிவித்தார், (ஐ)

# ஆஸ்திரேலிய துருப்புக்கள் இந்தோனேசியா செல்லுமா?

## பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி

இந்தோனேசியாவில் நாடளாவிய ரீதியில் பரவிவருற் கலவரங்களை அடக்குவதற்காக ஆஸ்திரேலியத் துருப்புக்கள் பயன்படுத்தப்படமாட்டார்கள் என்று ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் இயன் மெக்லச்லான் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் 1996 ஆம் ஆண்டு செய்து கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கை இந்தோனேசியாவின் உள் விவகாரங்களில் அவசியமாகாது என்றும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளும் எதிர்கொள்ளும் சவால்களை முறிபடிக்கவே அந்த உடன்படிக்கை உதவும் என்று தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் அவர் கூறினார்.

இதேவேளை—

இந்தோனேசிய நெருக்கடியை ஆஸ்திரேலியா உன்னிப்பாகக் கவனித்து வருவதாக ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹோவேட் கடந்த வாரம் தெரிவித்தார்.

இந்தோனேசியாவில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட நிதிநெருக்கடி காரணமாக அது கடுமையான பொருளாதாரப் பிரச்சினையை எதிர்நோக்கி உள்ளது.

இதன்காரணமாக நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கிடுகிடுவென அதிகரித்துள்ளது. இதனால் மக்களிடையே அதிருப்தியும், வன்செயல்களும் அதிகரித்துள்ளன.

(ஐ)

# மனித உடல் உறுப்புடன் இரு சீனர்கள் கைது

நியூயோர்க், பெப். 26

மனித உடல் உறுப்புக்களை விற்க முயன்ற சீன நாட்டவர்கள் இருவரை அமெரிக்க நீதித்துறை அதிகாரிகள் நியூயோர்க்கில் வைத்து கைது செய்துள்ளனர்.

மாற்று உறுப்பு அறுவைச் சிகிச்சைக்காகவே இந்த உடல் உறுப்புக்களை இவர்கள் விற்க முயன்றுள்ளனர்.

சீனாவில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் உடல் உறுப்புக்களே இவ்வாறு விற்பனை செய்யப்பட இருந்தன.

விழிவெண்படலம், சிறுநீரகம் ஆகியவற்றை அமெரிக்காவின் மத்திய புலனாய்வுத் துறை அதிகாரியிடம் விற்க முயன்ற போதே சீனர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

மனித உறுப்புக்கள் விற்பனைக்காக சீனாவில் இருந்து எடுத்துவரப்படுகின்றனவா அல்லது உறுப்புக்களை வழங்குவதற்காக கைதிகள் அதிகாரிகளுக்குக் கொண்டுவரப்படுகின்றனரா என்பது தெரியவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## பீதியூட்டும் புகை மூட்டம்!

இந்தோனேசியாவின் கரிமஞ்தான் மாகாணத்தில் புதிதாக ஆயிரத்துக்கும் அதிகமான இடங்களில் காட்டுத் தீ பற்றியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பீதியூட்டும் வகையில் வளிமண்டலத்தில் பரவிவரும் புகை மூட்டம் தென்கிழக்காசியாவை மீண்டும் மூடிப்பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

நிலைமையை மதிப்பிடுவதற்காக ஆசியான் நாடுகளின் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்கள் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கே வரும் பொருள்கள்

# கொழும்புத் துறைமுகத்தில் வைத்தே இனி ஏற்றப்படும்

கொழும்பு, பெப் 26 வடப்குதிக்கு அனுப்பப் படும் உணவுப் பொருள்கள் உட்பட ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் யாவற்றையும் தொடர்ந்தும் கொழும்புத்துறை முகத்தில் வைத்தே ஏற்றுவது என துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்புக் கருதியும் உருவாகியுள்ள பதற்ற நிலை காரணமாகவும் வடபகுதிக்கு அனுப்பப்படும் பொருள்களை பெப்ரவரி 1 ஆம் திகதியில் இருந்து காலித் துறைமுகத்தில் வைத்து கப்பல்களில் ஏற்றுவது என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

காலித் துறைமுகத்தில் வைத்து இப்பொருள்களைக் கப்பலில் ஏற்றுவதாயின் அவற்றை கொழும்பில் இருந்து காலித் துறைமுகம் வரை தரைமார்க்கமாகக் கொண்டு செல்ல வேண்டும். இதனால் மேலதிக செலவினங்கள் ஏற்படுவதைக் கவனத்தில் எடுத்த அமைச்சர் வடபகுதிக்கான பொருள்களைத் தொடர்ந்தும் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து கப்பல்களில் ஏற்றுவது எனத் தீர்மானித்துள்ளார்.

வடபகுதி மக்களுக்காகத் தனிப்பட்ட வியாபாரிகளால் கொண்டு செல்லப்படும் பொருள்களைக் கொழும்பில் இருந்து காலிக்கு ஏற்றிச் செல்வதால் ஏற்படும் மேலதிக செலவை ஈடுசெய்யும் விதத்தில் அப்பொருள்களை வடபகுதி மக்களுக்கு விற்கும் போது மேலதிக விலையில் விற்கவேண்டியுள்ளது என அமைச்சருடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தையின் போது தனியார் வர்த்தகர்கள் எடுத்துக் கூறினர். இதனையும் கருத்திற் கொண்டே கொழும்புத் துறைமுகத்தில் வைத்தே வடபகுதிக்கான பொருள்களை கப்பல்களில் ஏற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [ஐ-10]

## சமுர்த்தி நியமனம்

நெடுந்தீவு, பெப். 26 ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சமுர்த்தி உத்தியோகத்தர்களாக ஏழு பேரும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சமுர்த்தி உத்தியோகத்தர்களாக மூன்று பேரும் நியமனம் பெற்றுள்ளனர். (ஐ-211)


தூண்டி (இரு திங்கள் ஏடு)
ஓராண்டு நிறைவை ஒட்டி நடத்தும்

**தமிழ்த்திறன் போட்டி**

முன்னர் அறிவிக்கப்பட்டபடி 27-02-98(வெள்ளி) நடைபெறாது. இப்போட்டி 03-03-98 செவ்வாய்க் கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

ஆசிரியர்.

(53654)

**SIYANA'S**

மீண்டும் யாழ். நகரில்!

★ அலுமினிய பைப்புகள் (பார்) ★ சோக்கேஸ், ★ கடை பிற்றிங்குகள் செய்வதற்குரிய அலுமினிய பீடிங்குகள் ★ கண்ணாடிகள் ★ ரிவேட், ★ பிளைவூட் ★ அண்ரனா பைப்புகள் ★ போமிக்கா சீட் மற்றும் ★ எலெக்ரிக் ரில் மெசின்

மேலும் இது சம்பந்தமான சகல விதமான பொருள்களுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

**சியானாஸ்**

இல. 77, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்) (53656)

**யா/வேம்படி மகளிர் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**

யாழ். மாவட்டத்திலுள்ள யாழ்/வேம்படி மகளிர் கல்லூரியில் சகல பழைய மாணவிகளையும் எதிர் வரும் 28 - 02 - 1998 சனிக்கிழமை காலை 10 00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் ஒன்றுகூடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்.
பழைய மாணவர் சங்கம்.

1998 - 02 - 24 [சி/2966]

**வாழ்த்துகின்றோம்**

யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்
1997 ஆண்டு 5 புலமைப் பரிசில்
பரீட்சையில் சித்தியடைந்த

1. செல்வன் சி. சுதர்சன் — 108
2. செல்வி யோ. பிரசாந்தி — 105
3. செல்வன் கு. சஞ்ஜீவன் — 94

ஆகியோரையும், அவர்களுக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவர்கள்.

[53653]

**Literature**
**O/L, A/L**
ஆரம்பம்: 28-02-98
9 மணி

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்.

(53649)

**1ST In Com., G.A.Q. 1998, 99**

**யாழ். பல்கலைக்கழகம் வெளிவாரி**

இதற்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

★ A/L இல் மூன்று பாடம் சித்தியடைந்தவர்கள் (கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்) விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் ஆரம்பம்: 28-02-98 (சனி)

விவரங்களுக்கு:
S. அருள் நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரிய குளம் சந்தி, யாழ்.

(53650)

**விற்பனைக்கு**

புத்தம் புதிய SANYO PROJECTER, புத்தம் புதிய NO 180 VIDEO CAMERA DECK, புத்தம் புதிய ELECTRIC & MANUAL DUPLICATING MACHINE (Roneo), PANASONIC AG DP 200 VIEDO CAME RA என்பன விற்பனைக்குண்டு.

**ஜெகா மோட்டோஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.

(53662)

**ஞானோதய அக்கடமி**
சங்கத்தானை, சாவகச்சேரி.

**வாழ்த்துகின்றோம்**

எமது நிலையத்தில் கல்வி கற்று சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை எமது நிறுவன சார்பில் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வர்த்தகப் பிரிவு

| பெயர் | பெறுபேறு |
|---|---|
| 1) தி. சிவமதி | 4A |
| 2) த. கிருபாகரன் | 3AB |
| 3) ஐ. ஜெனார்த்தினி | 3AB |
| 4) செ. கலாவதனி | 3AB |
| 5) வே. சுபாஜினி | 2A2B |
| 6) கு. அகல்யா | A3B |
| 7) செ. செந்தீபன் | A3B |
| 8) து. கெங்காதரன் | 3BC |
| 9) S. ஜசிந்தா | 3BC |
| 10) யோ. உமேஸ் | 3BC |
| 11) P. சுபாகரன் | A2BC |

கலைப்பிரிவு

| | |
|---|---|
| 1) ந. எழில்வேல் | 2ABC |
| 2) ச. சிவப்பிரியா | AB2C |

தென்மராட்சியில் முன்னணி வகிக்கும் எமது நிறுவனத்தின் ஆசிரியர் குழு:

ECO. [ திரு. லோகசிங்கம், திரு. அன்ரனி
BU. STU. — திரு. பசில்
ACC. [ திரு. இராஜேந்திரன், திரு. பார்த்தீபன்
STAT. — திரு. தவசேகர்
TAM. — திரு. அமரசிவம்
HI. CUL. / HI. CIA. ] — செல்வி சுதமதி
PO. SC. — திரு. சர்வா
GEO. — திரு. ராஜன்
ENG. — திரு. BRITTO

A/L 98 மீட்டல்வகுப்புகளும், A/L 2000 பிரிவுகளும் ஆரம்பமாகியுள்ளன. (கலை, வர்த்தகம்)

03 - 03 - 98 — ENGLISH புதிய பிரிவுகள் ஆரம்பம்
நேரம் — 9. 00 a. m

— நிர்வாகி

(சி/2970)


**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



பிறப்பு: 23 — 05 — 1979
இறப்பு: 27 — 01 — 1998

**யோகநாதன் சுகந்தன்**

எமதருமைச் செல்வமே!
குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்தும்
சொந்தங்களினதும் அயலவரினதும் ஆசைமலராய்
இருந்தும்
காலனின் அழைப்பை யேற்று
அம்மாவுடன் கதைத்த வண்ணம்
இறைவன் திருவடி சென்றாலும்
நீங்காது உம் நினைவு எம் நெஞ்சைவிட்டு.

என்றும் உமது ஆத்மா சாந்தியடைய
நாள்தோறும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

பெற்றோர், சகோதரிமார்,
உறவினர், அயலவர்.

கெற்பலி, மிருசுவில்.

(53659)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறைச் சிறையில் உள்ள 188 பேரின் விவரங்கள் கிடைத்தன

யாழ்ப்பாணம், பெப். 26

களுத்துறைச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 188 தமிழ் இளைஞர்களின் பெயர்ப் பட்டியல்கள் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளன.

கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் 1994, 1995, 1996, 1997 ஆம் ஆண்டுகளில் கைது செய்யப்பட்டவர்களே இந்தப் பட்டியலில் அடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் காணாமற் போனோர் பலரின் உறவினர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரு பிரதிநிதிகள் அண்மையில களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளுடன் நேரடியாக உரையாடியதுடன் அவர்கள் கைப்பட எழுதிய சுயவிவரக் கோவையையும் பெற்றுள்ளனர். இந்த விவரங்களை குழுவின் யாழ். செயலகத்தில் உறவினர்கள் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

இதே போன்று அனுராதபுரம, நீர்கொழும்பு உட்பட தென்பகுதிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை நேரில் சந்தித்து அவர்களது விவரங்களை மனித உரிமைகள் ஆணைக்குழு பெற்று வருகின்றது. இந்த விவரங்கள் விரைவில் குழுவின் யாழ். செயலகத்திற்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பலாலி, காங்கேசன்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி போன்ற இடங்களில் கைது செய்யப்படுபவர்கள் தொடர்பாகக் கிடைக்கும் முறைப்பாடுகளையடுத்து உடனுக்குடன் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குச் சென்று கைதானவர்களைச் சந்திப்பதுடன் அவர்கள் தொடர்பான விவரங்களையும் மனித உரிமைகள் ஆணைக்குழு பெற்று வருவதாக குழுவின் யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ–5)

## பனாகொடை படையினர் கிராமவாசிகளுடன் மோதல்

களுத்துறை ரஜவத்தையிலுள்ளவீடொன்றைத்தாக்குவதற்கு முயன்ற பனாகொடை இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்களுக்கும் கிராம வாசிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருசிப்பாய், ஒரு பெண் உட்பட நால்வர் காயமுற்றனர். அவர்கள் நாகொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்த மோதலில் பனாகொடை இராணுவ முகாமைச் சேர்ந்த ஐந்து சிப்பாய்களுக்குத் தொடர்பு உண்டு என்று கருதப்படுகின்றது. சிப்பாய்களின் தலைவன் என்று கருதப்பட்டவர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடி பல்வேறு கொள்ளைகளில் ஈடுபட்டு பொலீஸாரால் தேடப்பட்டு வந்தவர் எனவும்—

அவர் மீண்டும் அண்மையிலேயே இராணுவத்தில் இணைந்துள்ளார் எனவும்— கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து களுத்துறைப் பொலீஸார் இராணுவப் பொலீஸாருக்கு அறிவித்துள்ளனர். (உ–10)

## மொறட்டுவப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றத்தின் சிறுகதை, கட்டுரைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 26

மொறட்டுவப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றத்தினர் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே ''தமிழருவி'' என்னும் தலைப்பில் சிறுகதை, கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இப்போட்டிகளில் பாடசாலைகளில் கல்வி பயிலும் ஆண்டு – 9 தொடக்கம் ஆண்டு - 13 வரையிலான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள்கலந்துகொள்ளலாம் எனவும்—

ஆக்கங்கள்யாவும் சொந்த ஆக்கங்களாகவும் இதற்கு முன்னர் பிரசுரிக்கப்படாதவையாகவும் இருத்தல் வேண்டுமெனவும்—

பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தப்பட்டவையாக அவை இருத்தல் வேண்டுமெனவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளும் அவற்றுக்குரிய தலையங்கங்களும் வருமாறு:–

★ சிறுகதை:– காலத்தை பிரதிபலிப்பதாகவோ யதார்த்தமானதாகவோ அல்லது விஞ்ஞான வெளிப்பாடுகளைக் காட்டுவதாகவோ அமையலாம்.

★ கட்டுரை:–

I சமூகத்தின் மேம்பாட்டுக்கு மாணவரின பங்களிப்பு.

II வளரும் விஞ்ஞான யுகத்தில் யாம் எதிர்நோககும் சவால்கள்.

III இலத்திரனியல் யுகத்தில்.

★ கவிதை:– ''உறவு என்னும் பாலம் செய்து...''

II ''பாரதி இன்று வந்தால்...''

கட்டுரைகள் 400 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டுமெனவும், கவிதைகள் மரபுக்கவிதையாயின் 40 வரிக்கு மேற்படாமலும் புதுக்கவிதையாயின் 80 வரிக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டுமெனவும், ஆக்கங்கள் யாவும் தாளின் ஒருபக்கத்தில் மாத்திரமே எழுதப்படல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆக்கங்கள் யாவும் அடுத்த மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் ''தமிழருவி'' இலக்கியப் போட்டி, தமிழ் இலக்கிய மன்றம். மொறட்டுவை பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மாங்குளத்தில் புலிகளின் காப்பரண் படையினர் வசமாம்

கொழும்பு, பெப். 26

மாங்குளம் பகுதியில் நிலத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த புலிகளின் காப்பரண் தொகுதியை படையினர் கைப்பற்றியுள்ளனர் என்று வடபகுதி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நான்கு காப்பரண்கள் ஒன்றாக இணைக்கப்பட்ட இந்தத் தொகுதியில் சுமார் 400 பேர் ஒரே தடவையில் பாதுகாப்பாகத் தங்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதல்களில் இருந்து தப்புவதற்காக விடுதலைப் புலிகள் இதனைப் பயன்படுத்தி வந்தனர் என படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ–10)

## வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 26

முழுகிச் சாப்பிட்டுவிட்டு உறங்கியவர் சிறிது நேரத்தில் சோர்வடைந்து மயக்கமுற்றார். பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர், அங்கு சிகிச்சைக்குட்படுத்திய சில மணி நேரத்தில் உயிரிழந்தார்.

உரும்பிராய்ப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தம்பு செல்லத்துரை (வயது 67) என்பவரே மரணமானவராவார். (ஐ–15)

## தியான மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 2

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் தியான மண்டபம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. மு. கணேசக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற தியான நிலையப் பிரவேச நிகழ்வில் சி. மனோகரக்குருக்கள், யோ. குருசாமிக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகள், சச்சிதானந்த செல்லம்மா அம்மையார் ஆகியோர் அருளுரை வழங்கினார்கள்.

தியான நிலைய மண்டபத் திறப்பு விழாவையொட்டி சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. ஆச்சிரமத் தலைவர் இ. குழந்தை வடிவேலு சிறப்பு மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

டாக்டர் கே. ரி. எஸ் சபாநாதன் தலைமையில் நடைபெற்ற தியான மலர் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும், கௌரவ விருந்தினராக டாக்டர் வ. சின்னப்புவும் கலந்து கொண்டனர். (ஐ–5)


**விக்னா**
**கல்வி நிறுவனம்**
யாழ்.

கணக்கீடு
திரு. பாலவாசன்
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 1–3–98

A/L 2000
SAT. – SUN. 1 — 2.00

A/L 98
SAT. – SUN. 2 — 3-00

A/L 99
SAT. – SUN. 3 — 4.00

(53648)


# வடமராட்சி கடலில் ரோந்து தீவிரம்!

யாழ்ப்பாணம் பெப். 26

பருத்தித்துறைக் கடற்பகுதியை உள்ளடக்கிய வடமராட்சி கடற் பிரதேசத்தில் கடற்படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிறு முன்னிரவு பருத்தித்துறை கடலில் இடம் பெற்ற கப்பல்கள் மீதான தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து இக்கடற் பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடற்படையினர் ரோந்துப் படகுகளில் கடல் ரோந்தில் ஈடுபட்டுள்ளனர். [ஐ-173]

## மீனவர்கள் செல்லவில்லை

வடமராட்சி, பெப். 26

பருத்தித்துறைக் கடலில் கடற்படைக் கப்பல்கள் தாக்குதல்களுக்குள்ளானதைத் தொடர்ந்து வடமராட்சி வடக்கு கடற் பிரதேசமான கற்கோவளம் தொடக்கம் தொண்டமானாறு வரையான கடலில் கடந்த திங்கட்கிழமை முதல் மீன்பிடிக்க மீனவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

கடந்த ஞாயிறன்று காலையில் இக்கடற் பிரதேசத்தில் கற்கோவளம் தொடக்கம் பருத்தித்துறை உள்ளிட்ட தொண்டமானாறு வரையான கடற்பகுதிகளில் படுப்பு வலைகளை வீசிவிட்டு மீனவர்கள் தத்தம் வீடுகளுக்குத் திரும்பி இருந்தனர்.

சம்பவத்தையடுத்து மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாமையினால் வீசப்பட்ட படுப்பு வலைகளை மீட்க முடியாத நிலையில் உள்ளனர்.

மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படாமையினால் அண்மைக்காலமாக வடமராட்சி பிரதேச மீன் சந்தைகளில் மலிவாக இருந்த மீன்வகைகளின் விலைகள் திங்கள் முதல் அதிகரித்துள்ளன. (ஐ-173)

## தொழில் முயற்சியை ஊக்குவிக்க அமைப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

''தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதன் மூலம் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புதல்'' என்னும் தலைப்பிலான பயிற்சி முகாம் ஒன்று ஜேர்மன் தொண்டு நிறுவனமான ஜி. ரீ. இசற்றினால் களுத்துறையில் அண்மையில் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் யாழ்ப்பாணத்திலிருந்து கலந்து கொண்ட பத்துப் பயிற்சியாளர்கள் ஒன்று சேர்ந்து ''தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சியாளர்களின் சங்கம்'' என்னும் அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இந்த அமைப்பின் தலைவராக ஜே. ஜீ. ராஜேந்திரனும், செயலாளராக டி. தர்மசீலனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், கைத்தொழில் அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர்கள், திட்டமிடல் பகுதி உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கி இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 05 — 12 — 1965

ஆண்டவன் அடியில்: 26 — 02 — 1994

செல்வன்

**நாகமுத்து சக்குணபாலா**

(ஜேர்மனி)

திதி: 26 — 02 — 1998

நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்ததையா,
நம் இனியவனே நம் துயர் தீராதையா,
விமானம் ஏறி கடல் கடந்தீர்
தேர் ஏறி எம் திருநாடு வருவீர்என
நாம் எல்லாம் எதிர்பார்த்து இருந்தோம் ஐயா!
நீ வானம் ஏறி மறைந்தாயோ எம் செல்வமே!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, அண்ணன்மார்,
அண்ணிமார், அத்தான், அக்கா,
தம்பி பாலன் (ஜேர்மனி),
உறவினர்கள்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(53646)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### நாய்க்குட்டிகள்

கிரேடன் (ஆண். பெண்), டோபமன் பிஞ்சர், பிரெஞ்ச் புல்டோக் (ஆண், டெண்) பொமனேரியன் (தனிக் கறுப்பு) நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். [53632]

### உடன் விற்பனைக்கு

பிறிமா ஹைலைன்பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் மற்றும் பெரிய இன கோல்பிஸ், கலிக்கோ வளர்ப்பு மீன்களும் உடன் விற்பனைக்கு உண்டு. 'மல்லிகாபதி', சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். [53631[

### தேவை

புதிய, பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்களும், றோணியோ இயந்திரங்களும் தேவை. தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். [53554]

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் நடந்ததை அறிய ஆவலாக உள்ள உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் நீங்கள் அனுப்பவேண்டிய நூல் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணத்தில் அந்த ஆறுமாதங்கள், ரூபா–50. [53642]

## விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், பெப். 26 பெரியபுலம் மகா வித்தியாலய விளையாட்டு விழா எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டுத்திடலில் நடைபெறும்.

வலயம் ஒன்றின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலநது கொள்வார். (ஐ–3)


**BOSCO INSTITUTE**
25, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
Spoken English
By: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
02 . 03 . 98
MON. 3.30 - 4.30

A / L 99 Eco.
தேசிய வருமானம்
திரு. விக்கி
ஆரம்பம்:– 28. 02. 98
காலை 7 - 8 மணி
(53643)

**எஸ். ஆர். சினிமா**
கரவெட்டி.
(அம்பம் வைத்தியசாலைக்கு அண்மையில்.)
புதன் முதல்
பிரபுதேவா, மீனா
நடித்த
நாம் இருவர்
நமக்கு இருவர்
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2959)


## கண்ணீர் அஞ்சலி

யா/ நவாலி மகாவித்தியாலய
ஆசிரியரான
திரு. ச. ஜெயானந்தன்
அவர்களின் அன்புத் தந்தையார்
**அன்ரனி றேமன் சந்தியாப்பிள்ளை**

அவர்கள் 23—02—98 அன்று இறைபதம்அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/ நவாலி மகாவித்தியாலயம்
அதிபர், பிரதி அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(53645)

## 3 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 14 — 05 — 1953



ஆண்வடன் அடியில்: 01 — 03 — 1995

அமரர்
**செல்லத்துரை அம்பிகைபாலன்**
(தொழில் நுட்ப உத்தியோகத்தர் (T.O)
குடிசார் எந்தரவியல் மாணவன் (C.E.III)
திதி: 26—02—1998

பொங்கிவரும் பெருநிலவே புத்தமுதே எங்களையா
அங்கமெலாம் அன்பனாய் ஆதாரமான
பொருளானாய்
தங்கமெனும் மனம் படைத்தாய்
தாரணியிலேயெமை
இங்கேன் ஏங்கவிட்டாய் வந்திடையா விரைந்து
உங்கள் ஆத்மசாந்திக்காக நித்தமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மகள், மகன்,
தாய், உடன்பிறந்தோர்,
மாமன், மாமி, மைத்துனர்கள்.

''மலர் வாசா'',
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
(53492)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நாகலிங்கம் கனகரட்ணம் (S. K)**
(ஓய்வுபெற்ற கணக்காளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்)

மண்ணில்: 02– 11– 1927
விண்ணில்: 08– 03 –1997

பாடுபட்டோம் உம்வாழ்வு
பக்குவமாய் நிலைக்கும் என்று
நீடு வாழ உன் நெஞ்சம் நினைக்கவில்லை
தோற்றுவிட்டோம்.

ஆறாத்துயரில் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள், சகோதரன்.

மில் லேன்,
பிரம்படி,
கொக்குவில்.
(53612)

## யாழ். சுகாதார நிலை குறித்து எம். பி. பேச்சு

யாழ். மாவட்டத்தில் சீர்குலைந்துள்ள சுகாதார நிலையை சீராக்கும் திட்டங்கள் குறித்து உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் அலவி மௌலானாவுடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். இராமேஸ்வரன் நேற்று முன்தினம் பேச்சு நடத்தினார்.

சுகாதாரச் சீர்கேட்டால் நோய்க் காவிகளினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த நோய்க்காவிகளை அழிக்கும் கிருமிநாசனிகளை உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் —

அந்தக் கிருமி நாசனிகளை சகல இடங்களிலும் தெளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்— இராமேஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.

இதற்காக தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதி கூறினார். (ஐ–5)

## பாம்புக்கடி அதிகரிப்பு

இரவுபடுக்கையில் வைத்து பாம்பு தீண்டியதாக மேலும் ஒருவர் நேற்று முன் தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அனலைதீவு முதலாம் வட்டாரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நடராசா நாகேஸ்வரன் (வயது 42) என்பவரே பாம்புக்கடிக்கிலக்கானவராவார். (ஐ–15)

பகுதிநேர
ஆங்கில ஆசிரியர் நியமனத்திற்கு
## விண்ணப்பம் கோரல்

கல்வித்திணைக்களம், யாழ். வலயம் 1, 2 களில் உள்ள பாடசாலைகளுக்கு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளதால், விரும்பிய விண்ணப்பதாரிகள் தங்களின் பெயர், விலாசம், பிறந்ததிகதி, க. பொ. த. (சா/த),(உ/த) தகைமை, ஆங்கிலத்தில் உயர்தகைமை ஆகிய விவரங்கள் உட்பட ஏனைய சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை தங்களுக்கு அண்மையில் உள்ள கோட்டக்கல்வி அலுவலகங்களில் 06. 03. 1998 ஆந் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு வலயம் 1, 2 இன் கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

சி. சிவராஜா,
கல்விப்பணிப்பாளர்,
கல்வித்திணைக்களம்,
யாழ். வலயம்-02

(சி/2968)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 28 — 08 — 1961



உதிர்வு: 28 — 01 — 1998

கோப்பாய் மத்தி
**அமரர் த. சத்தியசீலன்**
(கிளை முகாமையாளர், வலி. கி. தெ. ப. ப. நோ. கூ. ச.)
(நீர்வேலி)

திதி: 26 — 02 — 1998 வியாழக்கிழமை

சத்தியம் சீலம் என்னும் தத்துவப் பேரைத் தாங்கிச்
சத்திய சீலனாய் சத்தியே தவிக்க விட்டெங்குற்றாய் நீ
சித்தமே கலங்குதையா சிந்தனைக் கரியதாய
வித்தையே காட்டி விட்ட விதியினை வென்றோ
மில்லை

அன்பும், பண்பும், அடக்கமும் கொண்டு அவனி போற்ற வாழ்ந்த தியாகசீலன் நோயுற்ற வேளை பாதுகாத்திடலாமெனப் பகலிரவாகக் கண் விழித்துத் தாபரித்தோர் யாபேரும் பதறிக் கைசோர எமக்கெல்லாம் ஆறாத்துயர் தந்து அணைந்து விட்ட குலவிளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், கூட்டுறவாளர் யாபேருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது வீட்டுக் கிருத்தியம் அவரது இல்லத்தில் 26 – 02 – 1998 வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது. அத்தருணம் குடும்ப சமேதராக வருகை தந்து ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

துயருறும்:
குடும்பத்தினர்.

முத்துமாரி அம்மன் வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
(53639)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பாவனையாளருக்கு பயன் சேருமா?

கப்பல் கட்டணமின்றி கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருள்களை நியாயமான விலைகளில் விற்க வேண்டும்.

யாழ்ப்பாணம் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறது.

குடாநாட்டில் உணவு மற்றும் பாவனைப் பொருள்களின் விலைகள் கொழும்பு விலைகளை விட நான்கு அல்லது மூன்று மடங்கு அதிகமாக விற்பனையாவதற்கு கப்பல் கட்டணமே காரணம் என்று கூறப்படுகிறது.

அதில் உண்மை இருந்தாலும் ,கப்பல் கட்டணத்தைச் சாட்டாகச் சொல்லி வர்த்தகர்கள் கூடுதல் லாபம் வைத்து விற்றார்கள்; விற்கிறார்கள் என்பது மறுக்க முடியாத, மறைக்க முடியாத ஒன்றாகும்.

காரண, காரியம் எதுவோ குடாநாட்டு மக்கள் தமது அத்தியாவசிய, பாவனைப்பொருள்களுக்கு அதிகவிலை கொடுக்க வேண்டியதால் அவர்களின் வாழ்க்கைச்செலவு உச்சத்துக்கு உயர்ந்துள்ளது. பல பொருள்கள், 1995 ஒக்ரோபருக்கு முன்னர் விற்கப்பட்ட விலைகளை விட அதிக விலைகளுக்கே இப்போதுகிடைக்கின்றன.

குடாநாட்டுப் பாவனையாளர்களால் தாங்க முடியாத இந்தச் சுமையைக் குறைப்பதற்காகவே, பாவனைப் பொருள்களைக் கப்பற் கட்டணம் அறவிடாமல் இங்கு கொண்டுவர வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை ஏற்பாடு செய்தது.

ஆனால் கப்பல் கட்டணமின்றிப் பொருள்கள் கொண்டு வரப்பட்டதன் நற்பயனைப் பெரிதாகப் பெற முடியவில்லை என்பதே பாவனையாளர்களின் முறைப்பாடாக உள்ளது. கப்பல் கட்டணம் இல்லாமல் கொண்டுவரப்பட்டதன் நோக்கம் திருப்தி அளிக்கும் அளவுக்கு உணரப்படவில்லை என்பதே மக்களின் – பாவனையாளர்களின் — பொதுவான கருத்து.

எப்படியோ, கப்பல் கட்டணமில்லாது பொருள்கள் தருவிக்கப்படுவதால் ஏற்படக் கூடிய நன்மை பாவனையாளர்களைச் சென்றடைவது நிச்சயமாக்கப்பட வேண்டும்.

பொருள்களைத் தருவிக்கும் நிறுவனங்கள் அவை தனியார் வர்த்தகர்களுக்குப் போய்ச் சேராமல் தடுப்பதிலும், விநியோக முறையைச் சீராக்கி, வேகமாக்கி, துடிப்புள்ள தாக்குவதிலுமே இது தங்கியுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் தமது பணப் பற்றாக் குறையை காரணங் காட்டி கொள்வனவைத்தாமதிக்காது இருப்பதில் அக்கறை செலுத்தவேண்டும். அதன் மூலமே விநியோக முறையை துடிப்புள்ளதாக்கி மக்களுக்கு உதவ முடியும். இதற்கான ஒன்றிணைந்த கொள்வனவு— விநியோக முறை அவசியம்.

# பகலில் கடிக்கும் நுளம்பே 'டெங்கு' காவி

# பெருதுவதைத் தடுக்க கவனம் தேவை

யாழ்ப்பாண நகரப் பகுதியில் இரவில் மட்டுமன்றி பகலிலும் நுளம்புத் தொல்லை அதிகரித்து வருகிறது. வருடம் முழுவதும் இந்தத் தொல்லை நீடிக்குமோ என்று கூட மக்கள் அஞ்சுகிறார்கள்'

நுளம்புக் கடியினால் மக்களுக்கு ஏற்படக்கூடிய தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இப்போது விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்படடு வருகிறது.

பகலில் கடிக்கும் நுளம்பினால் உண்டாகும் டெங்குக் காய்ச்சல் குறித்து இக்கட்டுரை விவரிக்கிறது,

டெங்கு நோய் உலகில் நானூறுக்கும் மேற்பட்ட நாடுகளில் காணப்படுகின்றது. 200 கோடி மக்கள் இதன் ஆபத்தை எதிர்நோக்குகின்றார்கள், தற்போது இந்நோய் தென் கிழக்கு ஆசியநாடுகளில் பிரச்சினைக்குரிய நோயாக உள்ளது.

இலங்கையில் 1965 ஆம் ஆண்டு தொடக்கம் இது தனது தலையை உயர்த்தி வருகின்றது. 1996 ஆம் ஆண்டு 970 பேர் இதனால் பாதிக்கப்பட்டு 43 பேர் இறந்துள்ளனர் என்று வைத்தியசாலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்நோயினால் பாதிக்கப்படுபவர்களில் 70சத வீதத்தினர் சிறு பிள்ளைகள் ஆவர்.

இலங்கையில் பருவமழையைத் தொடர்ந்து டெங்குக் காய்ச்சல் பெருக்கத்தை அவதானிக்க கூடியதாக உள்ளது.

நுளம்பு கடிப்பதனால் ஏற்படும் வைரஸ் நோய்களில் ஒன்றான இந்நோய், மூன்று முக்கிய நிலைகளில் அறியப்படுகின்றது.

டெங்குக் காய்ச்சல்— (Dengue Fever)

இரத்தப்போக்குள்ள டெங்குக் காய்ச்சல் (Dengue Haemorrhage Fever)

டெங்குவினால் ஏற்படும் அதிர்ச்சி அறிகுறிகள் (Dengue Shock Signs)

டெங்கு வைரஸ் தொற்று ஏற்பட்டால் கீழ்க்காணும் நிலைகளுள் ஒன்று ஏற்படலாம்.

★ நோய்க்கான அறிகுறி இல்லாமல் இருக்கலாம்.

★ இனங் காண முடியாத வைரஸ் காய்ச்சலின் அறிகுறிகள்.

★ ''டெங்கு''க் காய்ச்சல்

★ இரத்தப் போக்குள்ள ''டெங்கு''க் காய்ச்சல்.

★ டெங்குவினால்ஏற்படும் ''அதிர்ச்சி அறிகுறிகள்''

டெங்கு வைரஸ் உள்ள ஒரு நோயாளியைக் குறிப்பிட்ட சில காவி நுளம்புகள் கடித்து, பின்னர் சுகதேகியைக் கடிப்பதனால் இந் நோய் தொற்றுகின்றது. இதே போல் குரங்களிலிருந்தும் நுளம்பு மூலம் இந் நோய் பரப்பப்படுகின்றது.

### வைரஸ்

டெங்கு வைரஸ் 4 வகைப்படும்!

DEN. I, DEN. II, DEN. III, DEN. IV,

இவை ஒரே சந்ததியைச் சேர்ந்தவைகளாயினும், ஒரு வகை வைரசுகளின் தொற்றினால்ஏற்படும் எதிர்ப்புச்சக்தி மற்றைய இனத் தொற்றுக்களுக்கு எதிராக சிறிய அளவிலேயே பாதுகாப்புத்தரும்.

4—6 நாள்கள் நோயரும்பு காலத்தின் பின் நோயாளியின் உடலில் வைரசுகள் காணப்படும்.

### நோய் காவி நுளம்பு:

ஏடீஸ் இஜிப்ரல் (Aedes Aegyptl) வகை நுளம்புகள் இந்நோய் பரப்புவதில் மிகவும் வல்லமை வாய்ந்தவை, இரத்தம் குடித்தபின், வீட்டின் உட்புறத்திலேயே தங்கி இருக்கும் இதன் பழக்கம் இதற்குப் பெரிதும் உதவுகின்றது. கருநிறமும் சிறிய உருவமும் உடைய இந்த நுளம்புகளின் நடுப்பாகத்தின் மேலும், கால்களிலும் வெள்ளி நிற வரி வடிவங்களும், புள்ளிகளும் உள்ளன. இந் நுளம்புகள் பகலில் இரத்தம் குடிக்கும் பழக்கம் உடையவை.

ஏடீஸ் அல்போபிக்ரஸ் (Aedes Albopictus) இது இரண்டாவது வகைக் காவி நுளம்பாக இனங் காணப்பட்டுள்ளது. மனித இரத்தம் குடித்தபின் இந்த வகை நுளம்புகள் அயலில் உள்ள தாவரங்களில் தங்கும் இயல்புடையன.

இந் நுளம்புகள் அநேகமாக அதிகாலை, மைம்மல் வேளைகளில் மனித இரத்தம் குடிப்பது அவதானிக்கப்படுகின்றது.

### தடை முறைகள்

காவி நுளம்பு 8 முதல் 10 நாள்களின் பின்னர் தனது உமிழ்நீர் சுரப்பியுள் வைரசுகளை வளர்த்து, பின்னர் சுகதேகியிடம் இரத்தம் எடுக்கும் போது வைரசுகள் செலுத்தப்படுகின்றன. ஒரு நோயாளியிடம் இரத்தம் எடுக்கும் போது, இடையில் தடைப்பட்ட நிலையில் வேறு ஒருவரில் இரத்தம் எடுக்கும் போதும் நுளம்பு நோயைப் பரப்பலாம்.

சுத்தமான நீர் நிலைகளில் முட்டையிட்டு, இம் முட்டைகள் நுளம்புகள் ஆவதற்கு 8—10 நாள்கள் தேவைப்படுகின்றன. சில வேளைகளில் இம் முட்டைகள் 12 மாதங்கள் வரை உயிருடன் இருக்கலாம்.

### பெருகும் இடங்கள்

எமது பகுதிகளில், சிரட்டை, கோம்பை, கைவிடப்பட்ட தகரம், சட்டி, முட்டி, பிளாஸ்ரிக் கலன்கள், பொலித்தீன் பைகள், ரயர், உலோகப் பாத்திரங்கள், பூச்சாடி, நீர்த்தாங்கிகள்,,பீலிபோன்றவற்றில் இவற்றின் பெருக்கம் காணப்படுகின்றன.

### நோயாளி

ஒரு சுகதேகியிடத்து முன் கூறிய 4 வகை டெங்கு வைரசுகளில் ஏதேனும் ஒன்று தொற்றுமிடத்து சாதாரண ''டெங்கு''க்காய்ச்சலையோ அல்லது'' இரத்தப்போக்குள்ள டெங்கு'' க் காய்ச்சலையோ உண்டுபண்ணலாம். டெங்கு வைரஸ் தொற்றினால் அதிகமாக 5 முதல் 7 நாள்களில் கடும் காய்ச்சல் ஏற்படும். இதைத் தொடர்ந்து நோய் எதிர்ப்புச் சக்தி உண்டாகும்.

### I டெங்குக் காய்ச்சல்

நோய் அறிகுறிகளின் தன்மைஅநேகமாக வயதைப் பொறுத்திருக்கும். வயதுவந்தோருக்கு கடும்காய்ச்சல், களைப்பு, கடும் தலையிடி, கண்களுக்கு உள் நோவு, தசைநார் மூட்டுகளில் நோவு, தோலுக்குள் இரத்தக் கசிவு ஏற்படுவதினால் பரவலான செந்நிறப்புள்ளிகள் உண்டாகும்.

சிசுக்கள், சிறார்களுக்கு பெரிய அளவு கொப்புளங்கள் உண்டாகும்.

இதனால் இறப்பு விகிதம் மிகவும் குறைவு, நுளம்பினால் மனித உடலுக்குள் உட்செலுத்தப்பட்ட வைரசுகள் இழையங்களில் அல்லது நிணநீர் முடிச்சுக்களில் பெருக்கம் அடைந்து, பின்னர் உடல் முழுவதும் உள்ள வெண்கலங்களைப் பாதிக்கின்றன. அங்கிருந்து இரத்தச் சுற்றோட்டத்தில் கலக்கின்றன. இவற்றுள் சில டெங்குக் காய்ச்சலை உண்டாக்குகின்றன. பல கலங்கள் பாதிக்கப்படுவதனால் மயிர்த்துளைக் குழாய்களில் உடைவு ஏற்பட்டு இரத்தக் கசிவு ஏற்படுகின்றது.

### II இரத்தப் போக்குள்ள டெங்குக் காய்ச்சல்

இதன் அறிகுறிகள்: தலை தூக்க முடியாத கடும் காய்ச்சல், இரத்தக்கசிவு, முகம் அதைப்பு, மூக்கால், முரசால் இரத்தக் கசிவு, மலம் கோப்பி நிறமாக வெளியேறுதல், தலையிடி, மூட்டு தசைநார்நோவு, தொண்டை நோவு, ஈரல் வீக்கம், இரத்த ஓட்டம் தடைப்படுதல்.

### அதிர்ச்சி தரும் டெங்குக் காய்ச்சல் அறிகுறிகள்

கடும் நோயாளிகளிடையே சிலநாள் காய்ச்சலைத் தொடர்ந்து நிலைமை மோசமடையும். 3 –7 நாள்களின் பின் காய்ச்சல் குறையும். இரத்தச் சுற்றோட்ட இயக்கக் குறைபாட்டு அறிகுறிகள் தென்படும். தோல் குளிர்ந்து, வாயைச் சுற்றியுள்ள பகுதி நீல நிறமாகக் காணப்படும். அமைதியின்மை, இதைத் தொடர்ந்து திடீர் அதிர்ச்சி அதிகரிக்கும் நிலை தோன்றும்.

இதற்கு வயிற்று நோவும் அதிகமாகக் காணப்படும். நாடித் துடிப்பு பலம் குறைந்தும் வேகமானதாகவும் இருக்கும். இரத்த அமுக்கம் குறையும். சரியான முறையில் அதிர்ச்சிக்கான சிகிச்சை அளிக்கப்படாதவிடத்து நோயாளி சிறிது நேர அதிர்ச்சியுடன் 24 மணி

( 9ஆம் பக்கம் பார்க்க)

— து. மகாதேவன் —
(பொதுச் சுகாதாரப் பரிசோதகர்,
யாழ்.மாநகர சபை.)

## தவக்கால சிந்தனை

(2 ஆம் நாள்)

இன்று மனிதனின் ஆசைகள் அளவு கடந்தவையாக உள்ளன. இதில் உயர்வு தாழ்வு இன்றி எல்லோரிடமும் நேர்மையுடன்உள்ளதை ஏற்றுக்கொள்வோமா? எதையும் கொடுக்கவும், இழக்கவும் மனநிலை மாறும் போது தான் தவம், ஒறுத்தல் என்ற செயலை சிந்திக்கும் தவக்காலத்தை எதிர்கொள்ள முடியும்.

''ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன்னையே பாழாக்கினால் பயன் என்ன?'' பணம், பொருள் ஆசையால் மனித உறவுகள் பலதை இழந்த போதும் பொருளைப் பாதுகாப்பதில் மன அங்கலாய்ப்பினாலும், மன நோய்களினாலும், பல நோய்களை புதிதாக தேடிக்கொள்ளும் போது உறவிழந்த எம்வாழ்வு எங்கே போகிறது என்று சிந்தித்துத் திருந்தினால் மட்டுமே தவக்காலத்தை அர்த்தமுடன் தொடலராம்.

அதற்கு இறைமகனின் குரல் உள்ளத்தில் ஒலிக்க வேண்டும். ''என்னைப் பின் செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்து தன் சிலுவையை நாள்தோறும் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும்'' தலைவன் முன்செல்கிறார் என்ற துணிவோடு உன்பயணம் இத் தவக்காலத்தில் தொடருமா?

[லூக் . 9: 22 – 25, மத் . 9: 14 – 15]

யோசப் பாலா

### உதயவாக்கு

தனிமனிதன் எவ்வளவு ஆற்றல் உடையவனாக இருந்தாலும், ஆபத்தான காலத்தில் உறவினர் உதவி இன்றி நிலைத்து நிற்க முடியாது — விதுரநீதி

## நாளை

மாசி 15

வெள்ளிக்கிழமை

திதி: பிரதமை

முன் இரவு 9.40 வரை

நட்சத்திரம்: சதயம்

முற்பகல் 9.46 வரை.

சுபநேரம்: 6.29 – 7.59

[illegible]: 10.59 – [illegible]

([illegible]

பழைய நேரப்படி)

## சாயி சிந்தனை

தனக்குச் சக்தி இருக்கிறது என இறுமாப்புக் கொள்பவனும், தான் கல்வி கற்ற மேதாவி என மார்தட்டிக் கொள்பவனும் அதிகாரிகள் அல்லர். அடக்கவொடுக்கங்களோடு எவர் இருக்கிறார்களோ அவர்களே உண்மையான அதிகாரிகள்.

ஆஞ்சநேயர் வலிமை மிக்கவராக இருந்த போதிலும் தனக்கு எதுவுமே தெரியாது எனகின்ற நிலையில் இருந்த படியால் சமுத்திரத்தையே தாண்டினார். சாக்ரட்டீஸிடம் ஒரு நண்பர் சென்று, ''உலகம் முழுவதும் பரவியுள்ள உங்கள் பெரும் புகழுக்குக் காரணம் என்ன?'' என்று கேட்டார்.

அதற்குச் சாக்ரட்டீஸ், ''நண்பரே! எனக்கு எதுவுமே தெரியாது என்கின்ற விஷயம் எனக்குத் தெரியும். அதன் காரணமாகவே என் புகழ் உலகம் முழுவதும் பரவியுள்ளது'' என்றார்.

கல்லின் மீது போடப்பட்ட விதை என்றென்றைக்கும் முளைத்து மரமாகாது. மண்ணில் ஊன்றப்பட்ட விதையே முளைத்து மரமாக வளர்ந்து பழங்களை அளிக்கின்றது. அதாவது அடக்கவொடுக்கங்கள் உள்ளவர்களே சிறந்தவர்கள். அடக்க வொடுக்கங்கள் இல்லாத கல்வி கற்ற மேதாவி அகங்கார சொரூபியே!

விளையாட்டில் சிறந்த வீரர்களாகத் திகழலாம், சிறந்த முன்மாதிரியை நிலைநாட்டிப் புகழ் ஈட்டியிருக்கலாம். ஆனால் சிறந்த கல்வி கற்றவன் என இறுமாப்புக் கொள்வது மட்டும் அழிவுக்கு வழி வகுப்பதாகும்.

[ஆதாரம்: சனாதன சாரதி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 5 ஆயிரம் விவசாயிகளுக்கு மண்வெட்டி விநியோகிக்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் மேலும் 5 ஆயிரம் விவசாயிகளுக்கு கமநலச் சேவை நிலையங்கள் மூலம் இலவசமாக மண்வெட்டிகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராம மட்டத்தில் இயங்கிவரும் விவசாய சம்மேளனங்களின் ஆலோசனையுடனேயே இந்த மண்வெட்டிகள் விநியோகிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் முழுநேர விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களை உள்ளடக்கிய 20 ஆயிரம் பேருக்கு கெயர் நிறுவனம் மற்றும் உலக உணவு விவசாயத்திட்டம் மூலம் ஏற்கனவே மண்வெட்டிகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த மண்வெட்டிகள் வழங்கப்பட்ட விவசாயிகளின் பெயர்ப்பட்டியல்களை கமநலச்சேவை நிலையங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்குமாறு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இதே வேளை மேலும் 19 ஆயிரம் மண்வெட்டிகள் கொழும்பிலிருந்து கொண்டு வரப்படவுள்ளன. இந்த மண்வெட்டிகள் கமநலச் சேவை நிலையங்கள் ஊடாக கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்மயப்படும்

(ஐ–5)

## சிரமதானம் மூலம் திருத்தம்

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் பாவனைக்கு ஏற்ற வகையில் சிரமதானம் மூலம் திருத்தியமைக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கையின் பின் மக்கள் மீளக்குடியமர்ந்து இரண்டு வருடங்களாகியும் மிதிவெடி அச்சத்தின் காரணமாக இம்மைதானம் பாவிக்கப்படாமல் இருந்து வந்தது.

ஈ. பி. ஆர். எல் அமைப்பு அப்பகுதி இளைஞர்களின் உதவியுடன் கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் குப்பை கூளங்தளை அகற்றி சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டதையடுத்து இம்மைதானத்தை மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். (ஐ–173)

## பருத்தித்துறைக்கான ஜெனரேற்றர் பழுது

### மின் விநியோகம் துண்டிப்பு

வடமராட்சி, பெப். 26

பருத்தித்துறை, புலோலிப் பகுதிகளில் கடந்த ஒரு வாரகாலத்துக்கு மேலாக மின்சாரத்தடை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளுக்கு மின்சாரத்தை வழங்கிவரும் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் உள்ள ஜெனரேற்றர் பழுதடைந்ததால் இப்பகுதிகளுக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

பழுதடைந்த ஜெனரேற்றரை திருத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. திருத்த வேலைகள் பூர்த்தியடைய இன்னும் சில தினங்கள் பிடிக்கும் என இலங்கை மின்சாரசபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-173)

## மருதங்கேணி அலுவலகம் இயங்குவது பற்றி விளக்கம்

யாழ்ப்பாணம், பெப்,26

''மருதங்கேணியில் இயங்கும் உதவி அரசாங்க அதிபரின் சுற்றுலாப்பணிமனை, உதவி அரச அதிபர் அங்கு செல்லாவிடினும் செயலிழப்பதில்லை.''

இவ்வாறு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் சி. பசுபதி தெரிவிக்கிறார்.

உதவி அரசாங்க அதிபர் வராததால் அலுவலகம் செயல் இழப்பு என்ற தலைப்பில் உதயன் 16– 02– 1998 இதழில் வெளியான செய்தி குறித்து அனுப்பிவைத்துள்ள விளக்கக் குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

அந்த விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

தங்கள் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் என்பது தவறாகும். வாரத்தில் வெள்ளிக்கிழமையில் மருதங்கேணியில் மட்டும் இயங்கும் ''உதவி அரசாங்க அதிபரின் சுற்றுலாப் பணிமனை'' அதுவாகும்.

அம்பனில் இயங்கும் உதவி அரசாங்க அதிபர்பணிமனையிலிருந்து பிரதி வெள்ளிக்கிழமை தோறும் உதவி அரசாங்க அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்படும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரும் உதவியாளர்களும் இப்பிரிவினுள் உள்ளடங்கும். இரு கிராம அலுவலர் பிரிவுகட்கான கிராம அலுவலர்களும் வெளிக்கள உத்தியோகத்தர்களும் இப்பணிமனையில் கடமை புரிவது வழக்கம்.

''கடந்த மூன்று வாரங்களாக உதவி அரசாங்க அதிபர் வருகை தராததால் செயலகம் செயல் இழந்து காணப்படுகின்றது'' என்பதில் எதுவித அர்த்தமும் இல்லை. உதவி அரசாங்க அதிபர் வராதுவிடினும் செயலகம் செயலிழப்பதில்லை என்பதை தெரிவிப்பதுடன் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வாரங்களில் முதல் வாரம் தேர்தல் கடமைக்காக சகல உத்தியோகத்தரும் தேர்தல் கடமையில் ஈடுபட்டமையினாலும், இரண்டாம் வாரம் உதவி அரசாங்க அதிபராகிய நானும், மூன்றாம்வாரம் நிர்வாக உத்தியோகத்தரும், திட்டமிடல் உதவிப் பணிப்பாளரும் குறித்த பணிமனைக்குச் சென்றுள்ளார்கள். இதனை சகல சம்பந்தப்பட்ட ஊழியர்களும் அன்றைய தினம் சமுகம் கொடுத்தோரும் அறிவர். (அ)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் சில முடிவுகள்

சமீபத்தில் வெளியிடப்பட்ட ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மேலும் சில கிடைத்துள்ளன.

பாடசாலைகளும், அவற்றின் பெறுபேறுகளும் வருமாறு:–

வீரசிங்கம் ம. வி.

★ கலை:– ஏ 2பி சி (4), 2ஏ2சி, ஏபி2சி, 3பிசி

சாவகச்சேரி மகளிர்

★ மருத்துவம்:– 4சி (2), 3சிஎஸ்

★ வர்த்தகம்:– 3பி சி, ஏ3சி

★ கலை:– 2ஏ பி சி, ஏ2பிசி (2), ஏபி2சி, 4பி (2), பி3சி (4)

சாவகச்சேரி இந்து

★ கணிதம்:– 2ஏ2பி (4), 3ஏபி (2), 3ஏசி, ஏ3பி, ஏபி2சி, 3பிசி

★ மருத்துவம்:– 3ஏ சி, 2ஏ2பி, ஏ3பி, 3பிசி(2), 4பி, ஏ2பிசி

★ வர்த்தகம்:- 4ஏ (2), 3ஏபி (3), 2ஏ2பி, ஏ3பி (3), ஏபி2சி, 3பிசி

★ கலை:– ஏ 3 பி (4), 2ஏ2பி, 2ஏபிசி, ஏ2பிசி (2), 4பி (2)

டிறிபேக்

★ மருத்துவம்:– ஏ பி 2சி,

★ வர்த்தகம்:– 2பி 2 சி, பி2சிஎஸ்

★ கலை:– 3பிசி, ஏபி2சி, ஏ3சி, 2பி2சி, பி3சி

மட்டுவில் ம. வி.

★ ஏ2பிசி (3), 2பி2சி (2), பி2சிஎஸ் (3)

முத்துத்தம்பி ம. வி.

★ பழையபாடத் திட்டம் — பி3சி, பி2சிஎஸ்

★ 'புதியபாடத்திட்டம் — 2பி2சி

பெரியபுலம் ம. வி.

★ பழையபாடத் திட்டம் — ஏபி2சி, பி3சி, பி2சிஎஸ்

★ புதிய பாடத்திட்டம் — 2ஏ2பி, ஏ2பிசி, 2பி2சி

(ஐ–இ–9–31)

## வணக்க ஸ்தலங்களை புனரமைப்பதற்கு நிதி

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ். மாவட்டத்தில் போரினால் சேதமடைந்த 48 ஆலயங்களை புனரமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்து, கிறிஸ்தவ ஆலயங்களும், முஸ்லிம் பள்ளிவாசல்களுமே இந்நிதிமூலம் புனரமைக்கப்படவுள்ளன. குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல் போன்ற பல்வேறு அனர்த்தங்களால் யாழ். மாவட்டத்திலுள்ள பல ஆலயங்கள் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே குறிப்பிட்ட சில ஆலயங்களின் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதுதெரிந்ததே.

## பருத்தித்துறைக்கு 'ஹெந்தல' வந்தது

வடமராட்சி, பெப். 26

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் பொருள்களை ஏற்றி இறக்கும் பணி மீண்டும் நேற்றுமுதல்ஆரம்பமாகியுள்ளது.

கடற்படைக் கப்பல்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து கடந்த இரு தினங்களாகப் பொருள்கள் ஏற்றி இறக்கும் பணி நடைபெறவில்லை.

நேற்று பருத்தித்துறைக்கு வந்த 'ஹெந்தல'' கப்பலில் தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கான புகையிலை, வெங்காயம் மற்றும் பொருள்கள் ஏற்றப்பட்டன. எஞ்சிய பொருள்களைஇன்று ஏற்றிக்கொண்டு அக்கப்பல் கொழும்பு நோக்கிப்புறப்படவுள்ளது.

இதே நேரம் ''ஓஷன் கரியர்'' கப்பல் நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை துறை முகத்துக்கு வந்து எஞ்சிய பொருள்களை இறக்கும். (ஐ–173)

## பண்ணையாளர்களுக்கு 5 நாள் பயிற்சி நெறி

வடமராட்சி, பெப். 26

பருத்தித்துறை புலோலி பகுதி கால்நடைப் பண்ணையார்களுக்கான 5 நாள் பயிற்சி வகுப்பு கடந்த திங்கள் முதல் புலோலியில் உள்ள கால்நடை வைத்திய நிலையத்தில் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி வகுப்பில் 25 பண்ணையாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

சர்வதேச / கெயர் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பமான இப் பயிற்சி வகுப்பினை கெயர்' நிறுவன திட்ட அலுவலர் எஸ். அருள்ஞானம், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆ, சிவசுவாமி ஆகியோர்மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

கால்நடை வைத்திய அதிகாரி திருமதி பு. தங்கராசா தலைமையில் இப்பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது.

(ஐ–173)

## திறந்த பல்கலைக்கழக செயற்பாடு விஸ்தரிப்பு

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இப்படி ஜனாதிபதி செயலகத்தினால் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திறந்த பல்கலைக் கழகத்தைசிறப்பாக இயங்கச் செய்யவேண்டும் எனக்கோரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மகஜர் ஒன்றை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அண்மையில் அனுப்பி இருந்தது.

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தை செயற்பட வைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ளுமாறு ஜனாதிபதி,உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-5)

## மருந்து வந்தது

யாழ். போதனா வைத்திய சாலைக்கான இவ்வருட முதலாம் கந்தாயத்துக்குரிய மருந்து வகைகளில் ஒரு தொகுதி நேற்று முன்தினம் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டது.

ஒக்சிஸன் சிலின்டர் மற்றும், சவலோன், குளோரின் போன்ற பொருள்களும் சில மருந்து வகைகளும் இதில் அடங்கும்.

அத்தியாவசிய தேவைக்குரிய ஏற்புத்தடை ஊசி மருந்து [illegible] தடுப்பு மருந்து வகைகள் எதுவும் எடுத்து வரப்படவில்லை. (ஐ–15)

# செய்திச் சாரம்

## பெறுபேறு மீளாய்வு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 26

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ.உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது.

ஒரு பாடம் மீளாய்வு செய்யப்படுவதற்கான கட்டணம் 125 ரூபாவாகும். இந்தக் கட்டணத்திற்குரியமுத்திரையை விண்ணப்பப்படிவத்தில் உரிய முத்திரைக் கூட்டில் ஒட்டி விண்ணப்பதாரியின் கையொப்பமும் திகதியுமிட்டுச் செல்லுபடியற்றதாக்க வேண்டும்.

ஒரு பாடத்திற்கு ஒரு விண்ணப்பபடிவம்என்றமுறையில் விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்று பரீட்சை'ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

(ஐ–5)

## வர்த்தக நிலையங்கள் மூடியிருக்கும்

வடமராட்சி, பெப். 26

பருத்தித்துறைப் பகுதியில் இன்று வியாழக்கிழமை கடைகள் யாவும் பூட்டப்படும்.

மகாசிவராத்திரி தினத்தையொட்டிஇத் தினத்தில் கடைகள் மூடப்பட வேண்டும் என பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

(ஐ–173)

## சேவை நலன் பாராட்டு

நல்லூர், பெப். 26

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி யாழ். இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலைக்குஇடமாற்றம் பெற்றுச் சென்ற வே. ஞானகாந்தனின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை முத்துத்தம்பி வித்தியாலயத்தில் எஸ். சின்னத்துரை தலைமையில் சேவைநலன் பாராட்டு விழா நடைபெறும். (ஐ–109)

## கிராம அலுவலர் ஓய்வு

நெடுந்தீவு கிழக்கு கிராம அலுவலராககடமையாற்றிய த. பசுபதி தமது பதவியில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் கடந்த பத்து வருடங்களாக கிராம அலுவலராகவும் அதற்கு முன்னர் 25 வருடங்கள் கமத்தொழில் திணைக்களத்தில் உணவு உற்பத்தி மேற்பார்வையாளராகவும்,கிருஷிகப் போதனாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். (ஐ–111)

## சங்கம் அமைப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நோக்குடன் ''யாழ். கோட்டை வட்டாரஇடம்பெயர்ந்தகுடியிருப்பாளர் சங்கம்'' என்ற பெயரில் அமைப்பு ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இச் சங்கத்திற்கென ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை தடைசெய்ய இலங்கையை அமெரிக்கா ஒருபோதும் கோரவில்லை

## கட்சிகளுடனான சந்திப்பில் அமெ. அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்யுமாறு இலங்கைஅரசை அமெரிக்கா ஒரு போதும் கோரவில்லை. இனப்பிரச்சினையை பேச்வார்த்தை மூலம் தீர்க்குமாறே அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

அமெரிக்கத் தூதராக அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரி அன்றூவ்மான் நேற்று தமிழ்கட்சிகளுடன் நடத்திய சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பு யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று காலை 11.30 மணியளவில் நடைபெற்றது.

யாழ். மாநகர அபிவிருத்தி தொடர்பாக மாநகரசபை தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட கட்சிகளின் பிரதி நிதிகளை சந்தித்து அமெரிக்க அதிகாரிகள்பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

இச்சந்திப்பில் அமெரிக்க தூதுவராலயத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளும், ஈ.பி.டி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர். எல். எவ். பிரதி நிதிகளும், யாழ். நகரக்கொமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ், மேஜர் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பின் போது அன்றுமான் மேலும் கூறியதாவது:–

இனப்பிரச்சினைத் தீர்வு கு இன்னாரோடு தான் பேசுங்கள் என்று இலங்கை அரசுக்கு நாம் உத்தர விட முடியாது அரசு தானாகவே பிரைச்சினையை தீர்க்க வேண்டும்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக ஒரு தீர்வை முன் வைத்து அரசு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

எங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்வு காணுமாறு அரசை கேட்டு வருகின்றோம்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் 1997 அக்டோபர் 8ஆம் திகதியிலிருந்து அமெரிக்காவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாகவே அமெரிக்கா அதனைத் தடை செய்தது. மனித உரிமைகள் அறிக்கைகளிலும் புலிகளின் நடவடிக்கைகளை குறிப்பிட்டு வருகின்றோம். புலிகளுடன் மட்டுமல்ல ஏனைய அரசியல் கட்சிகளுடனும் இலங்கை அரசு பேச்சு நடத்தி ஒரு தீர்வுக்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இப்படி அவர் கூறினார்.

### கூட்டணி

தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதி எஸ். நாவேந்தர் இங்கு உரையாற்றும் போது, கடந்த 20 வருடங்களாக அபிவிருத்தி எதுவுமின்றி அழிந்து போயுள்ள யாழ். நகரை கட்டியெழுப்ப மனித நேயமிக்க நாடுகள் முன் வரவேண்டும்.

வலி. வடக்குப் பகுதி மக்கள் மீளக் குடியமர்வதற்கு அரசு மற்றும் படைத்தரப்பு, அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவவேண்டும்என்றார்.

### ஈ. பி. ஆர். எல். எவ்.

ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதி எஸ். இரத்தினம் உரையாற்றும்போது யாழ். மாநகர சபைப் பகுதியில் வீதி புனரமைப்பு. வடிகால் அமைப்பு, நீர் விநியோகம், மலசல கூடங்கள், போன்ற பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்படவேண்டும் என்றார்.

ஈ. பி. ஆர் எல். எவ். உறுப்பினர் த. சுபத்திரன் உரையாற்றும்போது உள்ளூராட்சி சபைகள் இயங்குவதற்கு முதலில் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படவேண்டும் — கௌரவமானதும், சுயமரியாதையுடையதுமான அரசியல் தீர்வுவேண்டும் இதற்கு அமெரிக்க அரசு அரசியல் ரீதியாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அரசின் அரசியல் தீர்வுத் திட்டத்துக்கு தமிழ்க் கட்சிகள் திருத்தங்கள் கொண்டு வந்துள்ளன இதனை அரசு ஏற்றுக் கொள்ளுமா என்பது கேள்விக்குறியே.

ஏனைய தமிழ்க் கட்சிகள் அரசியலில் பங்குபற்றும் அரசியல் உரிமையை தடுக்கும் ஜனநாயக விரோதப் போக்கை புலிகள் கைவிட வேண்டும் என்றார்.

### புளொட்

புளொட் உறுப்பினர்கிருபைராஜா உரையாற்றும்போது யாழ். மாநகர சபை கட்டடம் நூலகம், திறந்த வெளியரங்கு, போன்ற பல அபிவிருத்தி வேலைகளுடன் கலை கலாசார விளையாட்டுத்துறைகளை கட்டியெழுப்பவேண்டும் என்றார்.

### ஈ.பி.டி.பி.

ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவ்தாசன் உரையாற்றும் போது வலி. வடக்கு பகுதியில் பல கிராம சேவையாளர் பிரிவுகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. தீவுப் பகுதியில் 78 ஆயிரம் மக்களும், காரைநகரில் 40 ஆயிரம் மக்களும் குடியிருந்தனர் இன்று மிகக் குறைந்தளவு மக்களே இப்பகுதிகளில் வசிக்கிறார்கள். இப்பகுதிகள் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட வேண்டும் சிமெந்து தொழிற்சாலை, சீநோர் தொழிற்சாலை, பரந்தன் இராசயனத் தொழிற்சாலைபோன்ற அனைத்துத் தொழிற்சாலைகளும் திறக்கப்பட வேண்டும். இதற்கு அமெரிக்காவும் மற்றும்நேசநாடுகளும்உதவி செய்ய வேண்டும் என்றார்.

### யாழ்.நகரகொமாண்டர்

யாழ். நகரக் கொமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் அங்கு உரையாற்றும் போது யாழ். அரசஅதிபருடன் இணைந்து படைத்தரப்பும் பல வேலைத் திட்டங்களை பூர்த்தியாககியுள்ளது.

தொலைபேசி வசதிகள், பஸ் நிலையம் மற்றும் வீதிகள் திருத்துதல் யாழ். போதனா வைத்தியசாலையின் செயற்பாட்டுக்கு உதவுதல், பாடசாலைகளை இயங்கச் செய்தல் உட்பட பல வேலைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம்.

யாழ். நகரில் உள்ளதிறந்த வெளியரங்கைத் திறப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம் என்றார். (இ-5)

## பகலில்...

(ஏழாம் பக்கத் தொடர்)

நோத்தில் இறந்துவிடுவார்.

இந் நோய்க்கான விசேட மருந்துகளோ அல்லதுதடுப்பு மருந்தோ இல்லை என்பதாலும், காவி நுளம்பு பகலில் கடிக்கும் தன்மை உடைமையினாலும் நுளம்பிலிருந்து மனிதனைப் பாதுகாத்தல், நுளம்பு அழிப்பு, குடம்பி அழிப்புச் செயற்பாடுகள் வேலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

அவை வருமாறு:

★ நுளம்பு முட்டையிடும் நீர் நிலைகளில் 7 நாள் களுக்கு மேல் நீர் தங்காது தடுத்தலும் அழித்தலும்.

★ சிரட்டை, கோம்பை, வீசப்பட்ட தகரம், பேணி பாத்திரங்கள், ரயர், சட்டி. முட்டி, பிளாஸ்ரிக் கலன்கள், பொலித்தீன் பைகள் ஆகிய வற்றை அழித்தல் கவிழ்த்தல்.

★ சுற்றாடல் சுகாதாரத்தை மேம்படுத்தல்

★ சமூகத்தில் இந்நோய் பற்றிய விழிப்புணர்ச்சியையும், அறிவையும் ஏற்படுத்துதல்.

★ கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளைச் சிரமதானம் மூலம் பரந்து பட நடைமுறைப்படுத்துதல்.

★ நோய் அறிகுறிகள் கண்டவுடன் சிகிச்சை வசதிள்கஉள்ளவைத்தியசாலைக்கு நோயாளியை அனுமதித்தலும், உரிய சிகிச்சைக்கு உதவுதலும்.

★


விற்பனைக்கு

புத்தம் புதிய Bendium MMX Computer, Lazer Printer, Scaner விற்பனைக்குண்டு.

திரு வீடியோ விஷன்

கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(53661)



புதிய உயர் கல்வியகம்

V. M. வீதி, பருத்தித்துறை.

G. A. Q. - 1999 ஆம் ஆண்டு

யாழ். பேராதனை

(பல்கலைக்கழக வெளிவாரி)

பட்டப்படிப்பு விரிவுரைகள்

ஆரம்பம்: 28-02-98

★ பதிவுகள் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

★ விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்கட்கு

(53665) - நிர்வாகி



சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு

நிலையத்தை நடத்துவதற்கான

கேள்வி விண்ணப்பம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இயங்கும்

ஊழியர் நலன்புரிச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின்

- சிற்றுண்டிச்சாலையையும்
- சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தையும்

01 - 04 - 98 தொடக்கம் 01 - 04 - 99 வரை (ஒரு வருட காலம்) நடத்துவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

எதிர்வரும் 05-03-98 பகல் 10.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பு: சிற்றுண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களை நடத்துவதற்கான படிவங்களும் நிபந்தனைகளும் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டாக்டர் சி. கதிரவேல்பிள்ளை (தலைவர்) கே. பரமதாஸ் (செயலாளர்)

(53664)



BOSCO Institute

யாழ்ப்பாணம்.

A/L 97

துரித மீட்டல்

தமிழ்

செல்வி உலகேஸ்வரி B. A

கிறிஸ்தவம்

செல்வி யூலி B. A.

வழமையான ஆசிரியர்களுடன்

ஆரம்பம்:– 28 – 02 – 98

காலை 8 மணி.

(53670)



நெல்லியடி

மஹாத்மா

வெண் திரையில்

திங்கள் முதல்

அர்ஜுன், சிம்ரான் நடித்த

கொண்டாட்டம்

காட்சிகள்: 10-30, 2-30

( பழைய நேரம் )

(சி/2756)



லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

35 அடி அகலத் திரையில்

புதன் தொடக்கம் ஞாயிறு வரையும்

முரளி — சுபலட்சுமி நடித்த

தினந்தோறும்

(புதிய வெளியீடு)

பழைய நேரம்

10.30, 2-30

(53059)



யாழ். பல்கலைக்கழக

புவியியற்கழக நிதியுதவிக்கான

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

பரிசு பெறும் இலக்கங்கள்

முதலாம் பரிசு 0072

இரண்டாம் பரிசு 4635

மூன்றாம் பரிசு 4787

ஆறுதல் பரிசுகள்

0474 2672 3637 4162 4000

3411 2546 1591 0544 4751

பரிசில்களை உரிய அத்தாட்சியுடன் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கான பரிசில்களை மனமுவந்து அன்பளிப்புச் செய்த அனைத்து நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

புவியியற்கழகம்,

யாழ். பல்கலைக்கழகம்.

விளம்பர அன்பளிப்பு

சிற்றி ரெயிலர்ஸ்

CITY TEX & TAILORS

[ரவுசர் தினுசுகளின் சங்கமம்]

73, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(53669)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொப்பேகடுவ மரணத்துக்கு பிரேமா நேரடிப் பொறுப்பு

## ஆணைக்குழு தெரிவித்தது

கொழும்பு, பெப். 26

ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட இராணுவ உயர் அதிகாரிகள் குண்டு வெடிப்பில் கொல்லப்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச நேரடிப் பொறுபாக இருந்தவர் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த படுகொலைகளை தமக்கு விசுவாசமாக உள்ள அதிகாரிகள் மூலம் பிரேமதாசா புரிந்தார் என்றும்—

கொப்பேகடுவவையும் மற்றையோரையும் படுகொலை செய்வதற்கு அவர்கள் பயணஞ் செய்த வாகனத்தில் வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டிருத்தன என்பது சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப் பட்டிருக்கிறது என்றும்— ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (இ-8)

# பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி பாடநெறி

வடமராட்சி, பெப். 26

யாழ். பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி பாடநெறி விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

இப் பாடநெறியை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானியக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இரண்டு வருடகாலத்தைக் கொண்ட உடற்கல்வி டிப்ளோமாவாக இப் பாடநெறி அமையும்.

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பில் சித்தியடைந்த மாணவர்கள் இப் பாடநெறிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். (இ-173)

# அம்பனைவரை பஸ்சேவை நடத்தக் கோரிக்கை

764இலக்க பஸ் சேவையை அம்பனை வரை நடத்துமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் எஸ். சொக்கலிங்கத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த பஸ் சேவையை அளவெட்டி, மாகியப்பிட்டி, வேளாவை ஊடாக அம்பனைச் சந்தி வரை நடத்துமாறு இப்பகுதி விவசாய சம்மேளனம் ப. நோ. கூ. சங்கம் உட்பட பல பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட இப்பிரதேசத்தில் தற்போது 600 குடும்பங்கள் வரை மீளக் குடியேறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ–5)

# பவ்வத்த கப்பலை மீட்க இந்திய உதவி பெறப்படும்

கொழும்பு, பெப். 26

கடற் புலிகளின் தாக்குதல்களின்போது பருத்தித்துறைக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட 'பவ்வத்த' கடற்படைக் கப்பல் நாளை அல்லது நாளை மறுதினம் மீட்கப்படலாம் என தெரியவருகின்றது.

இக்கப்பலை மீட்பதற்காக இந்திய கடற்படையின் உதவி நாடப்பட உள்ளது.

மேற்படி கப்பலுடன் மூழ்கடிக்கப்பட்ட ரி 86 ரக இரு யுத்ததாங்கிகளும் சேதமடைந்திருக்கமாட்டா என கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (இ-21)

# ஒய்வூதியத் திட்டத்தில் மூத்த கலைஞர்கள்

## ராமமூர்த்தி நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 26

வடபகுதியிலுள்ள மூத்த கலைஞர்களை ஓய்வூதியத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ராமமூர்த்தி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தூதுக்குழுவொன்று இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ராமமூர்த்தியை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

இப் பேச்சுவார்த்தையின் பின்னர் மூத்த கலைஞர்களை ஓய்வூதியத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் பாரம்பரிய கலைகளை ஆவணப்படுத்த உதவுவதர்கவும் அவர் உறுதி மொழி வழங்கினார். (இ–5)

**WANTED**

Rent or Sale

6 Bedroom House with Lerge Compound, in M.C. Area.

M. Sakthikumar
No.46,
Rasavinthodam,
JAFFNA.

(53663)

## காயம்

யாழ்ப்பாணம், பெப். 26

ஓடிக்கொண்டிருந்த டிராக்டரில் இருந்து விழுந்து ஒருவர் காயமடைந்தார்.

நவாலி வடக்கு, மானிப்பாயில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பரமானந்தம் ஜெயந்தன் (வயது 27) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ–139–15)

## திருட்டு

சுதுமலை, பெப். 26

சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலையில் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர் அறையின் ஓட்டைப் பிரித்து உள்ளே நுளைந்த திருடர்கள் அங்கிருந்த தட்டச்சு இயந்திரம், மற்றும் விளையாட்டு உபகரணங்கள், பெரிய பாத்திரங்கள், அண்டாக்கள், குத்துவிளக்கு போன்றவற்றை திருடிச்சென்றுள்ளனர். (இ–139)

## ஒலிவர் பதவி நீடிப்பு

வவுனியா, பெப். 26

இம் மாதம் 17 ஆம் திகதி சேவையில் இருந்து ஓய்வு பெறவிருந்த விமானப் படைத் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை விமானப் படைத் தலைமையக அதிகாரியாக இருந்த அன்சலன் பீரிஸின் பதவிக்கால நீடிப்பிற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் விமானப் படைத் தலைமையக நடவடிக்கைத் தளபதியாகவிருந்த ஜயந்த வீரக்கொடிக்கு விமானப் படைத் தலைமையக அதிகாரிப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை விமானப் படைத் தலைமையக நடவடிக்கைத் தளபதியாக கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சேர்ந்த சுலக்ஷன சல்காடோ நியமிக்கப்பட்டுள்ளார்.

விமானப்படையின் தலைமையக கட்டளைத் தளபதியாக பிஜித் தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். (இ–7–164)

# 103 பேரையும் லித்துவேனியா நாடு கடத்தும்

கொழும்பு, பெப். 26

லித்துவேனியாவுக்குள் சட்ட விரோதமாகப் பிரவேசித்துள்ள 103 பேர் தத்தமது நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படவிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் பிரான்ஸிலிருந்து குளிரூட்டப்பட்ட உணவுகள் கொண்டு செல்லும் டிரக் ஒன்றினுள் மறைந்திருந்து சட்டவிரோதமாகப் பிரிட்டனுக்குள் பிரவேசிக்க முயற்சிசெய்த சமயம் பிரிட்டிஷ் சுங்கப் பகுதியினர் 15 இலங்கையர்களையும், பங்களாதேஷ் வாசிகளையும் கைதுசெய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (இ–8)

## ஒலுமடு...

(முதலாம் பக்கத் தொடர்)

களும் நேருக்கு நேர் மாதிக்கொண்டார்கள் என்று அரச தரப்புச்செய்திகள் தெரிவித்தன.

படையினர் பெருமளவு பீரங்கிகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்தி வருகின்றனர். புலிகள் படையினரின் நிலைகளை ஷெல்களினால் தாக்குகின்றனர்.

இதற்கிடையில் மாங்குளத்தை கைப்பற்றப் போவதாக வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கைத் தளபதி ஸ்ரீலால் வீரசூரியா அறிவித்திருப்பது பெரும் வியப்பைத் தருவதாக புலிகளின் குரல் நேற்று இரவு தெரிவித்தது.

''புளியங்குளத்துக்கு அருகில் படைகள் நின்ற போது புளியங்குளம் கைப்பற்றப் பட்டதாக அறிவிக்கப்பட்டது. 3 மாதங்கள் கழிந்து புலிகள் அதனைக் கைவிட்ட பின்னர் பிடித்துக் கொண்ட படையினர் தற்பொழுது மாங்குளத்தைக் கைப்பற்றப் போவதாக அறிவித்திருக்கின்றனர் என்று புலிகளின் குரல் மேலும் தெரிவித்தது. (இ–8–7)

# கைத்தொழில் அபிவிருத்திச் சபை நடத்தும் மகளிர் தொழிற் பயிற்சி

கைத்தொழில் அபிவிருத்திச் சபை நடத்தும் மகளிர் தொழில் முயற்சி அபிவிருத்திப் பட்டறையில் சிறுவியாபார முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கணக்கு எழுதுதல், உற்பத்தி முகாமைத்துவம், திட்ட அறிக்கை தயாரித்தல் உட்பட பல்வேறு தலைப்புக்களில் விரிவுரைகள் நிகழ்த்தப்படுவதுடன் செய்முறையிலும் பயிற்சி வழங்கப்படுகிறது.

யாழ். சென் ஜோன்ஸ் அக்கடமியில் இப் பயிற்சி பட்டறை நடைபெற்று வருகிறது.

இப்பட்டறையை நடத்துவதற்கு கைத்தொழில் அபிவிருத்திச்சபை இரண்டரை இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ். குடா முழுவதும் தெரிவுசெய்யப்பட்ட 60 பெண்கள் இப் பயிற்சிப் பட்டறையில் பயிற்சிபெறுகின்றனர்.

இவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கென மகளிர் தொழி முயற்சியில் விசேட நிபுணத்துவம் பெற்ற கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் கொழும்பு தலைமையகத்தைச் சேர்ந்த திருமதி ஷிராணி பெர்னாண்டோ, தொழில்முயற்சி அபிவிருத்தி ஆலோசனை சேவை நிலைய பணிப்பாளர் எஸ்.குலரட்ண ஆகியோர் உட்பட ஏழு அதிகாரிகள் கொழும்பிலிருந்து வருகை தந்துள்ளனர்

பத்துநாள்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த பயிற்சி பட்டறையில் தொழில்நுட்ப பரிமாற்றம், எலக்றோனிக் கடிகார உற்பத்தி, தோல் உற்பத்தி, உணவு உற்பத்தி, பேக்கறி உணவுப் பொருள்கள் தயாரிப்பு உட்பட பல்வேறு தொழில் முயற்சிகள் தொடர்பான செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படும்.

இப் பயிற்சியின் பின்னர் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளவிரும்பும் பயிற்சியாளர்கள் வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று தொழில் முயற்சிகளைத் தொடங்குவதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவி செய்யும் என்று பணிப்பாளர் குலரட்ண தெரிவித்தார்.

## குறிகாட்டுவான்-யாழ்.

# பஸ் சேவையை சீராக்க கோரிக்கை

குறிகாட்டுவானில் இருந்து தினமும் காலை 8.00 மணியளவில் யாழ். செல்வதற்கென பஸ் சேவையை ஆரம்பிக்க உதவுமாறு நயினாதீவு மக்கள் யாழ்.மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் ஆர்.ராமமூர்த்தியை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்பொழுது காலை 11.00 மணியளவில்குறிகாட்டுவானிலிருந்து புறப்படும் பஸ் பகல் 2.00மணியளவில்தான் யாழ்ப்பாணம் செல்கிறது.

இதனால் இந்த பஸ்ஸில் செல்பவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று அடுத்த நாள் தான் திரும்ப வேண்டிஉள்ளது. எனவே தினமும் காலையில் ஒரு பஸ் சேவையை நடத்தினால் போக்குவரத்தை சுலபப்படுத்த முடியும் என்றும் நயினாதீவு மக்கள் சுட்டிக்காட்டியுள்னர்.

இது தொடர்பாக ஆர். ராமமூர்த்தி எம். பி. வடபிராந்திய போக்குவரத்துச் சபையுடன் தொடர்பு கொண்டுள்ளார். (இ-5)

# உண்ணா விரதத்தை ராமதாஸ் கைவிட்டார்

திண்டிவனத்தில் டாக்டர் அம்பேத்கார் சிலை தொடர்பான சம்பவத்தில் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டுமென்று கோரி நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதமிருந்து வந்த பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் நேற்று மாலை தனது உண்ணா விரதத்தை முடித்துக்கொண்டார்.

அ. தி. மு. க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா ராமதாஸுக்கு நேற்று மாலை பழச்சாறு கொடுத்து உண்ணா விரதத்தை முடித்து வைத்தார்.

திண்டிவனத்தில் அம்பேத்கார் சிலை சம்பந்தமான பிரச்சினையில் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டியது காவல் துறையினரின் கடமையாகும் என்றும் அதுவரையில் அனைவரும் பொறுமையாக இருக்கும்படியும் தமிழக முதல்வர் மு. கருணாநிதி கேட்டுக் கொண்டார்.

(முன்வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்) (இ-8)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாகம் ஒன்றைப் பிடித்தவாறு தமிழகத்தின் நாகபட்டினத்தைச் சென்றடைந்த நான்கு கடற்படையினரும் இன்று இலங்கை வந்துசேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியக் கடற்படையினரால் பராமரிக்கப்பட்டுவரும் இவர்கள் இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்.

இன்று அனேகமாக அவர்கள் இலங்கை வந்து சேருவார்கள் என இலங்கைக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## அடுத்து..,

(முதலாம் பக்கத் தொடர்)

கையின் போதே உக்கிர சண்டை இடம்பெறலாம் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த 10 மாதங்களாக நடைபெற்றுவரும் யுத்தத்தின் போக்கையும், இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கும் கூற்றையும் கவனிக்கும் போது அடுத்துவரும் மாதங்களில் யுத்தம் மேலும் தீவிரமடையலாம்.

இப்படி அவர்மேலும் தெரிவித்தார். (இ–8)

## உதவிப் பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

னேட்டுக்களை வீசி விட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்.

இச்சம்பவத்தில் உதவிப் பொலீஸ் அதிபர் ரஞ்சித் கஸ்தூரி ரட்ண, இன்ஸ்பெக்டர் ரஞ்சித் சில்வா, பொலீஸ் கான்ஸ்டபிள் ஆர். எம். சூரசேன உட்பட பத்துப் பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஏனையோர் பொதுமக்கள் என்றும் இவர்களில் மூவர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் உட்பட இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ–21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26 – 02–98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org